# திராவிடநாடு

22—9—57 | வார வெளியீடு | விலை 0—2—6


## தி. மு. க.

"முளையிலே கிள்ளிவிட வேண்டுமிந்த
முன்னேற்றக் கழகத்தை" என்றுசொன்ன
தலைமைக்குச் சொல்லுகின்றோம் இதனை தி. மு. க.
முளையல்ல செடியல்ல கிள்ளிப்போட!
மூண்டடர்ந்த ஆலமரம் அறிவின்ஊற்று
மொய்க்கின்ற கடலோரம்! ஒளிமின்மாடம்!
ஆண்டழிந்த தமிழினத்தின் மானம்காக்க
அணிவகுக்கும் போர்விரம் தி.மு.க.அறிக!

பள்ளியிலே சிறுகுறும்பு கிள்ளும்வேலை
பாராளும் அரசியலிலும் அதுதானென்றால்
கொள்ளையிலே தான்போகும் இந்தநாட்டுக்
குடிமகனின் தனியுரிமை! ஆட்சிக்
கொல்லையிலே தனிமாடாய் மேய்வோம்யாரும்
குறுக்கிடிலோ கிள்ளியதை அழிப்போமென்று
சொல்லுகின்ற திமிர்வாதம் ஆணவத்தின்
கடைசிமூச்சு! அரசியலில் பொருந்தாப்பேச்சு!

தாய்நாட்டை தனையீன்ற நாட்டின்பேரை
தமிழ்நாடு என்றழைக்கும் வாய்ப்பைக்காணோம்!
வாய்விரம் பேசுகின்றார் "தி.மு.க.வை
வளரவிடோம் ஒழித்திடுவோம்" என்கின்றார்கள்
வரிவேங்கைப் புலிவிரம் இந்தவெறும்
வார்த்தைப் பந்தலுக் கஞ்சாதுஇதனை
தெரியாத பேருக்குச் சொல்வோம்
திராவிடநாடு திராவிடருக்கே வெல்வோம்.

—'மான்'

# என்னென்பேன்!

[ அரங்கண்ணல் ]

மாலை 2 மணிக்கு—புதிய பள்ளிக் கட்டடம் திறப்புவிழா

,, 4 மணிக்கு—பஞ்சாயத்து போர்டில் வரவேற்பு

,, 5 மணிக்கு—கழகக் கட்டிடம் திறப்பு

,, 6 மணிக்கு—கழகப் பொதுக் கூட்டம்.

*

இது நிகழ்ச்சிநிரல்! காஞ்சியிலிருந்து சனிக்கிழமை புறப்பட்ட எங்கள் கார், தண்ணீர் கண்ட இடமெல்லாம் நின்று, ஓய்வெடுத்துக் கொள்ள விரும்பியபோதெல்லாம் எடுத்து, எங்களை சரியாக நண்பகல் 2 மணிக்கு—திறப்புவிழா செய்யவேண்டியநேரத்தில்—சிதம்பரத்தில் கொண்டு சேர்த்தது!!

'மணி என்ன?' என்கிறார், அண்ணா. 'இரண்டு!' என்று சொன்னதும், டிரைவரைப் பார்க்கிறார். அவர் என்ன செய்வார்? கீழே மிதிக்கிறார்! பறக்கிறது கார். கொஞ்சத்தூரம்போனதுமே, ரயில் இஞ்சின்போல் புகைகிளம்புகிறது — நிறுத்திப்பார்த்தால், காருக்கு 'கடும் தாகம்' ஏற்பட்டுவிட்டதென்று தெரிகிறது. மனிதனாயிருந்தாலும் அவசரப்படுத்தலாம் — மணி முள் ஓடுகிற வேகம் காருக்கு எப்படித் தெரியும்? தாகம் தீர்த்துக்கொண்டே சீர்காழி—மாயவரம்—திருவாரூர்— திருத்துறைப்பூண்டி தாண்டிவிட்டோம். மணி 5. முத்துப்பேட்டை, பிறகு பட்டுக்கோட்டை, அடுத்தது அறந்தாங்கி, அதற்குப்பக்கத்தில்தான நாங்கள் போய்ச் சேரவேண்டிய சுப்பிரமணியபுரம். எங்களுடன்வந்த பொன்னுவேல் கேட்கிறார், "இந்நேரம் நிகழ்ச்சிகள் முடிந்திருக்குமல்லவா?" என்ன பதிலைச் சொல்வது! யாரைக்கோபித்துக்கொள்ள முடியும்!!

கார், திருத்துறைப்பூண்டியைத் தாண்டி, முத்துப்பேட்டை ரோடில் திரும்புகிறது. எதிரே ஒரு எச்சரிக்கைப் பலகை,

**முத்துப்பேட்டையிலிருந்து**
**பட்டுக்கோட்டை போகும்**
**வழி சரியில்லை.**

ஏன் சரியில்லை? என்ன காரணம்? —என்கிற விளக்கம் ஏதுமில்லை! பலகை, எச்சரிக்கையை மட்டும் தந்தது. வழி நெடுகிலும் 'கார்'த்

> 'சுப்பிரமணியபுரம்' போய் வந்த 'கதை' இது.
>
> நிதியமைச்சர் சுப்பிரமணியத்தின் ஊரல்ல! அறந்தாங்கிக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூர்!!
>
> நாள்தோறும், எவ்வளவோ, சங்கடங்களைத் தாங்கி, தி. மு. க. நடை போட்டு ஒன்பதாம் படிக்கட்டில் நிற்கிறது. கடந்த செப்டம்பர் 17ந் தேதியோடு எட்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன.
>
> இந்த எழுச்சியின் விளைவை கிராமப் புறங்களில் எல்லாம் நாம் காண இயலுகிறது. கழக மறியாதோரும், நம்பால் அன்பு காட்டுகின்றனர், இன்று.
>
> எட்டாண்டு காலத்திலே, தி. மு. க. பெற்றுள்ள வளர்ச்சி சாதாரணமானதா? இல்லை! நிச்சயமாக இல்லை!!
>
> ஒரு ஊர் பயணம் இது.

தொல்லை—அதுபோதாதென்று, பாதையும் இல்லையென்று பலகை தெரிவிக்கிறது. பக்கத்தில் கேட்டதற்கு 'பாமணியாற்றுக்குப்பாலம் கட்டுகிறார்கள். அதனால் பாதை சரியில்லை," என்கிற விளக்கம் கிடைத்தது. சரி!—என்று திருத்துறைப்பூண்டியிலிருந்து திரும்பி மன்னார்குடி சென்றோம்—20 மைல் அதிகமாயிற்று—அதிலும் தஞ்சை மாவட்டத்திலுள்ள ரோடுகளைப் பற்றிக் கேட்கவாவேண்டும்? ஏழையின் முதுகுகூடத் தோற்றுவிடும் அத்துணை வளைவுகளாயிற்றே!!

மதுக்கூர் வழியாக பட்டுக்கோட்டைபோய் அறந்தாங்கி சேரும்போது மணி 9 ஆயிற்று. "சரி! எல்லாம் நடந்துபோயிருக்கும். வந்ததுதான் வந்தோம், கழகக் கூட்டத்தையாவது நடத்திவிட்டுப் போவோம்," என்று ஒரு மூலையில் நிறுத்தி, 'சுப்பிரமணியபுரம் எங்கேயிருக்கிறது?' எனக் கேட்டோம். தோழர்கள், அறந்தாங்கியின் ஒரு பகுதியிலுள்ள ஊர் என்று மட்டுமே சொல்லியிருந்தனர். ஆனால் அங்கே போனபோதுதான் தெரிந்தது அறந்தாங்கியிலிருந்து ஏழெட்டு மைலுக்கப்பாலுள்ள ஊர் என்று!

"எப்படிப் போகவேண்டும்?"

"காரிலா!"

"ஆமாம்!"

"காரில் போகமுடியாதே..."

எப்படியிருக்கும் எங்களுக்கு? அந்தச் சிற்றூருக்கு காரில் போக இயலாதாம்! ஏனெனில் சரியான பாதை கிடையாதாம்!! ஒருவர் சொன்னார், "அரசர்குளம் வழியாக நீங்கள் போகலாம்," என்று. காரைத் திருப்பச் சொல்வதற்குள் அவரே ஓடிவந்து........."ஆனால், அங்கேயிருந்த ஒருபாலம் இடிந்து போய்விட்டதால் நீங்கள் அப்படியும் போகமுடியாது," என்று தெளிவாக அறிவித்தார். என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பியபோது, இன்னொருவர் ஒரு பாதை சொன்னார், "இங்கேயிருந்து இன்னும் 6 மைலில் நாகுடி இருக்கிறது — அங்கே போய்விட்டால் எப்படியாவது நீங்கள் சுப்பிரமணியபுரம் போய்விடலாம்."

(15-ம் பக்கம் பார்க்க)

# அண்ணாமலை அழைக்கிறது!

16] ஆண்டு சந்தா ரூ. 8 [22—9—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 10


அன்பு ததும்ப அண்ணாமலை அழைக்கிறது! தீப தரிசனம் காண அல்ல, தேய்ந்துபோன நாட்டில் மேய்ந்து வரும் ஆதிக்க வேங்கைகளைக் காட்ட; ஆர்வத்தோடு அழைக்கிறது, திருவிடத்தை!! கொஞ்சு தமிழும், கோலோச்சிய குடும்பங்களும், இன்று பஞ்ச மொழியாயும், பரதவிக்கும் குடிசைகளாயும் ஆகிவிட்ட பரிதாபத்தைக் காணீர் — பாதையொன்று அமைப்பீர்—என்று இரு கையேந்தி அழைக்கிறது!!

செப்டம்பர் திங்கள் 21, 22-ந் தேதிகளிலே, கொள்கை வீரன், கொடியோரால் கொல்லப்பட்ட தீரன் சாமியின் நினைவாக மிளிரும் அரங்கில் கூடவிருக்கும் வடாற்காடு மாவட்ட தி.மு.க. மாநாடுகளுக்குத்தான் ஆர்வமும் ஆசையும் கலக்க அழைப்பு விடுகிறது, திருவண்ணாமலை.

“கார்த்திகை தீபம்டி! கண்டவர்க்கு மோட்சமடி!”, என்று பாடி ஆடிக்கொண்டு, தீனதயாபரனைக் காணச் செல்லும் பக்தகோடிகள் உண்டு. பக்கத்தில் ‘நிஷ்டை’யிருந்து மாண்ட, ரமணரின் ‘திவ்ய’ குணாதிசயங்களைப் பேசிப் பேசி, அருள் பெற நாடிடும் அன்பர்களும் உண்டு. ஆண்டுதோறும் அருணாசலேசுவரருக்கு ஆராதனைகளைச் செய்யாமலில்லை, பக்தர்கள்! பதிகம் பாடியும், நாமாவளி செய்தும், ‘நல்ல கதி தருவாய்’ என்று ஏங்காமலுமில்லை!! எரியும் சூடமும், புகையாகும் சாம்பிராணியும் ஏராளம், ஏராளம். எனினும், இந்நாள் வரை, ஈசன், வந்தானில்லை—மாறாக, ‘வட ஆற்காடு’ வாழும் மக்கள் வறண்ட தலையும், சுருண்ட உடலும், மருண்ட கண்களுடனும் மோசம் போன வாழ்க்கையே நடத்துகிறார்கள். நீரில்லாத ஆறும், சுவையில்லாத வாழ்வும் அவர்களுக்குச் சொந்தமாகிவிட்டது! மலைகள் உண்டு —அங்கே மனதைப் பிளக்கும் நிலை கொண்ட ஆதிக்குடிகள் வாழ்கிறார்கள். கழனிகள் உண்டு —ஆனால், கண்ணீர் வடித்தால்தான் நீர் கிடைக்கும் என்கிற நிலைமை. கனிச் சுரங்கங்கள் எடுக்கலாம் என்கிற தகவல்கள் உண்டு— ‘தோண்டியெடுப்பது யார்?’ என்கிற துயரக் குரலும் உண்டு. இப்படி, இருந்தும் இல்லாதவர்களாக, ஏங்கும் திராவிடத்தின் ஒரு பகுதி வட ஆற்காடு. அது அழைக்கிறது, நாட்டவர்களை! தன்னைக் காணவும், தன் குறைகளைப் பேசவும், தாய் நாட்டவரை அன்போடு அழைக்கிறது!!

ஒன்று—இரண்டு— இப்போது மூன்றாவது மாவட்ட மாநாடு முன்பைவிட, வளம் அதிகமாகிவிடவில்லை! மாறாக, ஒளி குன்றித்தானுள்ளது வாழ்வில்! கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டினோம் என்கிறது, சர்க்கார் கணக்கு. ஐந்தாண்டுத் திட்டம் — தேசிய அபிவிருத்தித் திட்டம்—கம்யூனிடி திட்டம் — என்று விதவிதமான பெயர்களில் திட்டங்களின் பெயர்களையும் சொல்லுகிறார்கள். எனினும் கண்ணீர் குறைந்ததாகத் தெரியவில்லை! களஞ்சியம் நிரம்பியதாகவும் காணவில்லை! கஷ்டம் அப்படியே உள்ளது — சுகத்தின் ரேகைகளும் தென்படவில்லை—எனினும், வட ஆற்காடு, ஒரு புதுப் பூரிப்புடன் அழைப்புவிடுகிறது, தாயகத்துக்கு. காளையாகிவிட்ட மகனைக் காட்டிப் பெருமிதம் கொள்வதுண்டல்லவா பெற்றோர், “நம்ப பையன்—பி. ஏ. படிக்கிறான்” என்று; படித்து முடித்ததும் சம்பாதிக்க ஆரம்பித்துவிடுவான், பிறகு கவலையில்லை எமக்கு எனும் பொருள் தொனிக்க. அதுபோன்ற நிலையில், வடாற்காடு மாவட்டம். காளைப் பருவமாகிவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம், அது சாதித்துவரும் பட்டியலையும் வளர்ச்சியையும் பார்த்திட வருக! வருக!! என்று அழைக்கிறது.

கடந்த முறை மாவட்ட மாநாடு கூடியதற்கும், இப்போது கூடுவதற்குமிடையில் எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அப்போது 'தனது' எம். எல். ஏ-க்களேயும் எம். பி-க்களேயும்காணும்வாய்ப்புக்கிடைக்கவில்லே. இப்போது தன்னுடைய 15-சட்டசபைப் பிரதிநிதிகளேயும் 2-பாராளு மன்ற உறுப்பினர்களேயும் பெருமிதத்தோடு அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. சாமான்யமா இது !! மலடி வயிற்று மகவுபோல, குருடன்பெற்ற ஒளிபோல, வசதியில்லாத ஏழைகள் பெற்ற 'பிரதிநிதித்துவம்' அன்ருே, இது. அதுவும், நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளும்—நமது பெரியாரும்—தடுத்தும் எதிர்த்தும், 'தகாது' எனச் சொல்லியும், ஏசியும் இழித்தும் எவ்வளவோ இடையூறுகளே ஏற்படுத்திய பின்னும் கிடைத்த வெற்றிகளன்ருே, இவை! அதனல், அண்ணுமலேயின் அழைப்பிலே, புதுவலிவும் தெம்பும் தென்படுகிறது. "ஏங்காதீர்! பழைய காலமல்ல, இது. பதினேழு இலட்சம் வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம். அது, கூடுகிறது, நாட்டின் நலன் காண; பாதையமைக்கும் வழி வகுக்க, மூன்ருவது தடவையாகக் கூடுகிறது. வருக! காண்க!" என்று பூரிப்புடன் அழைக்கிறது.

முதல் நாள் இந்தி எதிர்ப்பு மாநாடு இந்தியை மீண்டும் நாம் எதிர்த்திட வேண்டிய கட்டம் விரைந்து கொண்டிருக்கிறதென்பதை நாடு அறியும். நல்லோர் கண்டித்தும், நமது சம்பத் நேருவின் காது பட எச்சரித்தும், காங்கிரஸ் சுப்பராயன் 'கூடாது' எனக் குறிப்பு எழுதியும், டில்லி பிடிவாதமாகத் திணிக்க இருக்கிறது, இந்தியை. இந்தத் தீமையை எதிர்த்திட திண்தோளும் காளேப் பருவமும் கொண்டுவிட்ட நாமன்றி யாருளர்? களிப்பு பிறக்காதா, வடாற்காடு மாவட்டத்துக்கு! கன்னித் தமிழ் பேசும் பொன்னி நாட்டுக்குரியோரே புறப்பட்டு வருக, புல்லர்தம் மொழியினைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யும் போரில் எமதுபங்கினையும் பெறுக, என்று அழைப்பு விடுகிறது!!

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலே' எம்மை மாட்ட நினேக்கும் சிறைச்சாலே", எனும் கீதம், முதல் முதல் இந்தியை விரட்டிட நாம் எழுந்த போது, கிளம்பியதாகும். அந்த இந்திஎதிர்ப்பில் சர்வாதிகாரியாகப் பணி புரிந்து சிறைசென்ற அருணகிரிநாத அடிகள் முதல் நாள் மாநாட்டில் தலேமை வகிக்க, அந்த இந்தி எதிர்ப்பின் முன்னணி வீரராய்ச் சிறை சென்ற காஞ்சீபுரம் சி. வி. எம். அண்ணுமலே துவக்கிவைக்கிருர்.

இரண்டாம் நாள் அன்பில் தருமலிங்கம் தலேமை வகிக்க, வெ. கிருட்டிணமூர்த்தி துவக்கிவைக்க தி. மு.க.வின் அரசியல் மாநாடு. இருவரும் தீரர்கள்! செயலேயும் மூச்சையும் அறிவுலகுக்கு அர்ப்பணித்து விட்டவர்கள்! கடந்த தேர்தலில் லால்குடியில் போட்டியிட்டு ஒருசில ஆயிரங்களில் தோற்ருர் தர்மு. நெல்லிக்குப்பம் தொகுதியில், முன்னுள் அமைச்சரைப் போட்டியிட்டு, இரண்டாயிரம் ஓட்டுக்குள் தோற்றவர் கிருட்டினமூர்த்தி. எனினும் என்ன! துவண்டா விட்டனர்? தோல்வி கண்டு துவளும் கொள்கைகளா அவர்கள் ஏந்தியிருப்பவை? முன்பைவிட ஆர்வமும், மக்கள்பணியிலே ஊக்கமும்கொண்டு 'நங்கவரம்' பெற்று வருகிருர்கள். அவர்கள் பங்கேற்கும் அம்மாநாட்டில், கழகத் தோழர்களின் குரல் ஒலிக்கும்! சட்டசபை உறுப்பினர்கள் தமது பணியின் வகையினே உரைப்பர்! காண்பதற்கரிய காட்சியன்ருே அது? எனவே தான் திருவண்ணுமலே, ஆனந்தத்தோடு அழைக்கிறது, அனேவரையும்.

களம் கண்ட புலிகள், முதல் நாள்! வீரமூச்சுக் கொண்ட வேங்கைகள் இரண்டாம் நாள்!! வெல்லுவோம் என்கிற பரணி பாடப்படும்—செல்லுவோம் எனும் சிந்து எழுப்பப்படும் திருநாள்! திராவிடருக்கோர் பெருநாள்! ஆதிக்கபுரியினருக்கோர் எச்சரிக்கை தினம்!—எனவேதான் அழைக்கின்றனர் வரவேற்புக் குழுவினர். வழக்கம்போல் கழகப் பாடல்கள், ஒலிக்கும். களிப்பும் கருத்தும் எம். ஜி. ஆர். தரும் நாடகங்களில் கிடைக்கும். காண வாருங்கள்! கழகத்தின் புகழ் காணுங்கள்!!

# உருவாகும் வரலாறு

*சென்ற இதழ் தொடர்ச்சி*

அந்தப் பையன், அந்தப் பாட்டனார் செத்துவிட்டார் என்று தெரிந்தாலும் அந்த வீடு இருக்கிற பக்கம் நோக்கிக் காரித் துப்பி, சீ! நீ ஒரு தமிழனா? என்று சொல்லுவான். அந்த எதிர்கால வரலாற்றை எழுதியிருக்கிறோமே தவிர, இன்றைய வரலாறு அல்ல. வோட்டெடுத்தால், என்ன, நீங்கள் 40, நாங்கள் 150 என்று காமராஜர் நடத்துகின்ற அரசியல் அல்ல, நாங்கள் நடத்துகின்ற அரசியல். எதிர்கால அரசியலை எழுதிக் கொண்டிருக்கின்றோம்— தேவைப்பட்டால் எங்கள் இரத்தத்தாலும் எழுதுவோம் — இரண்டாவது நாங்கள் ஓட்டெடுத்தது கைத்தறி நெசவாளர் பிரச்னை. அதற்கும் இதைப்போலவே கைத்தறி நெசவாளருக்குப் பாதுகாப்புத் தேவையில்லை என்று காங்கிரஸ்காரர்கள் ஓட்டளித்தார்கள். "தேவை", என்று நாங்கள் ஓட்டளித்தோம். நாங்கள் குறைந்த எண்ணிக்கையாக இருக்கிறோம், அவர்கள் அதிக எண்ணிக்கையாக இருக்கிறோம் என்கிற காரணத்தால் அவர்களுடைய குரல் வெற்றி பெற்றது—நாங்கள் தோல்வியுற்றோம். எங்களைத் தோற்கடித்து நெசவாளர்களுக்குத் துரோகம் செய்தவர்கள்—எங்களைத் தோற்கடித்துவிட்டு தமிழ் நாட்டுக்குத் துரோகம் செய்தவர்கள் — அவர்கள் உங்களூரிலும் இருக்கின்றார்கள்—இவர்களையெல்லாம் விட்டுவிடுங்கள். பாவம்! இவர்கள் வெறும் காங்கிரஸ்காரர்கள். தமிழ் நாட்டு எல்லைக்காகவே போரிட்டுக் கொண்டிருந்தாரல்லவா, வீரர் விநாயகம்! அவரும் எழுந்து நின்றார். நான் திரும்பிப் பார்த்தேன். ஜூலியஸ் சிசர் கதைதான் எனக்கு ஞாபகம் வந்தது. புரூடஸ் குத்திய நேரத்திலே "புரூடஸ் நீயுமா?" என்று சிசர் கேட்டானே அதுபோல, "என்ன விநாயகம்? நீயுமா!!" என்றேன். தலையைத் தொங்கவிட்டார் எல்லையிலே ஒரு 'இஞ்சு' குறைந்தாலும் விடமாட்டேன் என்று வாதாடுகிற தமிழ் நாட்டு வீரர்.

அவர் காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, 'தமிழ் நாடு' என்கிற பெயர் வேண்டாம்', என்றார். இவை இரண்டுக்கும்தான் ஓட்டு எடுத்தோம். இவை தேவைதானா, இல்லையா என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்து, எங்களுக்கு உங்கள் நல்ல தீர்ப்பை அளியுங்கள். ஆனால் இப்பொழுதும் நான் சொல்லுகிறேன். இந்த முறைகளினாலேயே எங்களுக்குத் திராவிட நாடு கிடைத்துவிடும் என்று நம்பிக்கொண்டிருக்கிற அளவுக்கு நாங்கள் பைத்தியக்காரர்கள் அல்ல.

அங்கே சட்டசபைக்குள்ளே நடக்கின்ற காரியமும் நடக்கவேண்டும்- இங்கே வெளியிலே நடக்கவேண்டிய காரியமும் நடக்கவேண்டும். ஓட்டலுக்குச் செல்லுகின்றவன், சேபியிலே எவ்வளவு காசு இருக்கிறதோ அதைப் பொறுத்து அவனுக்கு ஓட்டலுக்குள்ளே போகிறபோது கம்பீரம் வரும். பையில் ஐந்து ரூபாய் நோட்டுடன் ஒருவன் உள்ளே போனால், கண்ணுக்குத் தெரிந்த பண்டத்தையெல்லாம் விலை கேட்காமல், அது ஒரு பிளேட் கொடு, இது ஒரு பிளேட் கொடு, என்பான். ஆறணா மட்டும் சேபியிலே வைத்துக் கொண்டிருப்பவன் மட்டும் போனால் பிளேட்டைக் கைகாட்டி கேட்பதற்கு முன்னால், சர்வரை இரகசியமாகக் கூப்பிட்டு — பிறருடைய காதிலே விழுந்தால் வெட்கமென்று எண்ணி!—அது என்ன விலை, என்று கேட்டு பிறகு கொண்டுவரச் சொல்லுவான். இப்பொழுது, எங்களுடைய நிலை இரண்டாவது நிலை. எங்கள் சேபியிலே 5 ரூபாய் நோட்டு இல்லை; 6 அணா சம்பாதித்துக்கொண்டு ஓட்டலுக்குள்ளே போகவேண்டிய நிலையிலே இருக்கிறோம்.

ஆகையினாலே, கிடைக்கின்ற ஒவ்வொரு பலகாரத்தையும் விலை கேட்டு வாங்குகிறோம்.

நீங்கள் 5 ரூபாய் நோட்டை எங்கள் சேபியிலே போட்டுவைப்பதைப் போல் தி. மு. க.வை வெளியிலே பலப்படுத்தினால் மிகவும் கம்பீரமாக நுழைவோம். எடுத்துக் கொடுப்பவனுடைய கை சலிக்குமளவுக்குக் கேட்போம்.

ஆகையினாலேதான், தி. மு. க.வின் நிலைகளை நீங்கள் இன்னும் வலுப்படுத்த வேண்டும், என்று நாடு பூராவிலும் நாள்தோறும், நான், நமது கழகத் தோழர்கள் உள்பட எல்லா இடத்திலும் எடுத்துச் சொல்லி வருகின்றேன். காங்கிரஸ்காரர்களிலே சிலபேர் கூட என்னைக் கேட்டார்கள். "என்ன இப்போது எலெக்ஷனா வருகின்றது. ஏனிப்படி அலைகின்றீர்கள்?, என்ன இப்பொழுது" என்று. என்னையே நான் கேட்டுக் கொள்ளுகின்றேன், "என்ன இப்பொழுது?", "எனக்கு புரியவில்லை". ஆனால் என்னமோ ஒன்று இருக்கிறது— அது இன்னம் [illegible] புரியவில்லை

# திராவிடம் எழுச்சி பெற்றுவிட்டது!

—நாட்டுமக்கள் நேற்றுச்சொன்னதையே இன்று சொல்லச் சொல்லுகிறார்கள். அங்கே சொன்னதையே இங்கே சொல்லச் சொல்லுகிறார்கள் — அவர், சொன்னதையே நீயும் சொல்லு என்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு தடவை சொல்லுகிற நேரத்திலும் புதுக் கருத்தைச் சொன்னால் பெறக்கூடிய மன எழுச்சியைப் பெறுகிறார்கள். காரணம் என்ன? உங்களுக்கு,நான், தாயும் குழந்தையும்தான் உதாரணம் சொல்ல முடியும். குழந்தைக்கு முத்தம் கொடுக்கின்ற தாய் ஏழாவது முத்தத்தோடு திருபதியா அடைந்து விடுவாள, எட்டாவது முத்தத்தோடு திருப்தியா அடைந்து விடுவாள். இதுபோல் என்னமோ ஒன்று நாங்கள் சொல்வதிலே மக்களுக்கு இருக்கிறது. இந்த என்னமோ ஒன்று வேலை செய்வதால்தான் நள்ளிரவிலே போனாலும் மக்கள் கூடுகிறார்கள் — பட்டணக்கரைக்குப் போனாலும் பல்லாயிரக் கணக்கில் கூடுகின்றார்கள் — சிற்றூர்களுக்குப் போனாலும் சிறப்பாக நடக்கின்றது.

கிராமத்துப் பெரியவர்கள்,தாய்மார்கள் — இதுவரை நமது கூட்டங்களிலே தாய்மார்கள் உட்கார்ந்துகொண்டு நாம் சொன்னதைக்கேட்டு கைதட்டியதை நான் இந்தப்பதினைந்துஆண்டுகளைவிட இந்த ஆறு மாத காலத்திலே அதிகம் பார்க்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தைவிட வட ஆற்காடு மாவட்டத்தில் கிராமப்புறங்களில் கூடுகிற கூட்டங்களில் பெண்கள் சரிபகுதி வந்து உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

என்னுடைய கவலை, அத்தனையும் நாம பேசுவது அவர்களுக்குப் புரிகிறதோ இல்லையோ என்கிற சந்தேகத்தில் எப்படியெப்படியோ மெள்ள அதனை எளிதாக்கி அவர்கட்குச் சொல்லுகிறேன். கூர்ந்து கவனித்தால் ஆடவர்கள் கை தட்டுவதற்கு முன்னாலே தட்ட வேண்டிய இடத்திலே தாய்மார்கள் கை தட்டாமலில்லை. இதற்கு என்னஅர்த்தம்?நாங்கள் யாருக்கு விஷயம் புரியவேண்டும் என்று விரும்பினோமோ அவர்களுக்கு விஷயம் புரிந்துவிட்டது. அதை அரசியல் கட்சிகளிலே உள்ளவர்கள் தெரிந்துகொண்டால்தான் இன்றைய அரசியலை தெரிந்துகொள்வார்கள். அவர்கள் என்றைக்கும் அளப்பதைப்போல் "அண்ணாதுரை $4\frac{1}{2}$ அடியா $3\frac{1}{2}$ அடியா, நெடுஞ்செழியன் 6 அடியா $6\frac{3}{4}$ அடியா, இந்த 'டேப்' பயன்படாது.நீங்கள் மக்களைக் கொஞ்சம் அளந்துபாருங்கள். இங்கே இவ்வளவு பெரிய கூட்டம் கூடுவதற்குக் காரணம் என்ன? அண்ணாதுரையைப் பார்த்ததில்லையா? அல்லது அண்ணாதுரை ஏதாவது ஒரு பெரிய நிதிமந்திரி வேலையில் வந்திருக்கிறானா? அல்லது அண்ணாதுரை ஏதாவது நாகப்பட்டணத்துக்குப்போய் கங்கை தீர்த்தத்தை கையிலே கொண்டுவந்து அதை இந்தப் பக்கத்திலே தெளித்தால் பட்ட மரம் துளிர்க்கும்—இந்தப் பக்கத்திலே நிற்கிறவர்மீது விழுந்தால் வீட்டுக்குப் போனவுடன இடுப்புவலி நீக்கும் என்று சொல்லத்தக்க அளவுக்கு ஏதாவது மந்திரவாதியா? ஒன்றுமில்லை. இருந்தாலும் ஏன் கூடுகின்றார்கள; அண்ணாதுரைக்கே கூடுகின்றார்கள் என்றால்-அதைத்தான் துவக்கத்திலேசொன்னேன், ஒரு இனம் எழுச்சிபெற்றுவிட்டதென்று பொருள். அந்த இனம் எழுச்சிபெற்றால்தான் இந்தக் கட்சிகளைக் காணமுடியும். அப்போதுதான் அது தனது பழைய இலக்கியத்தைத் தேடும் — இன்றைய தினம் பழைய இலக்கியம் தேடப்படுகின்றதே? திருக்குறள் இல்லாத வீடு இல்லையே இன்றையதினம் தமிழ் நாட்டிலே! எதனாலே? அகநானூறு புறநானூறு என்ன என்னவென்று கேட்காத படித்த தமிழ் மகன் இன்றைய தினம் இல்லை. காரணம் என்ன? முன்னமே சொன்னபடி இன எழுச்சி ஏற்பட்டுவிட்டது. இதனை யாரால் இனித் தடுக்க இயலும்?...

விக்கிரமாதித்தனைப்போல நாடாறு மாதம் காடாறு மாதம் என்று வெளிநாடுகளுக்கும் போய் வருகிறார் நேருபண்டிதர். அவர் போய் வருகிற ஊர்களெல்லாம் என்ன, காங்கிரஸ்காரர்களைக் கேளுங்கள்—பிரான்சுக்குப் போகிறார், எத்தனை பெரிது? ஜெர்மனிக்குப்போகிறார், எவ்வளவு பெரிது? பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலே என்ன தடை? பிரான்சும் ஜெர்மனியும ஏன் வேறு வேறு நாடுகளாக இருக்க வேண்டும்? ஸ்விட்சர்லாந்து எவ்வளவு சிறியநாடு? ஏன் அது தனி நாடாக இருக்கவேண்டும்? பின்லாந்து ஏன் தனிநாடாக இருக்கிறது? ரஷ்யா ஏன் தனிநாடாக இருக்கின்றது? கிரீஸ் ஏன் தனி நாடாக இருக்கிறது? இத்தாலி ஏன் தனிநடாக இருக்கவேண்டும்? போர்ச்சுகல் எதற்காகத் தனி நாடு? இவைகள் எல்லாம் ஏன் தனி நாடு என்பது இருக்கட்டும். தனி நாடு வேண்டாம் என்று பேசும் இந்த நேரு அங்கே போகிறாரே, ஏன் தனிநாடு என்று ஏன் இவர் அங்கு கேட்கவில்லை? கேட்கமாட்டார். கேட்டால் மறுபடியும் அவரை வரவழைக்கமாட்டார்கள். அவர் மட்டும் ஐரோப்பாக் கண்டத்துக்குபபோய "இப்படி சிறு சிறு நாடுகளாகப் பிரிந்திருப்பது தவறு, எங்களைப் பாருங்கள், வடக்கே இமயம் தெற்கே குமரி, ஆயிரத்தைந்நூறுமைல் அகல நீளம், இந்தப பக்கம் பம்பாய் அந்தப்பக்கம் கல்கத்தா, இது அத்தனையையும் ஒன்றாக நாங்கள் தேசியத்தாலே கட்டிவைத்திருக்கிறோம, இவ்வளவையும வெறும் கதா நூலால்தான சுட்டிவைத்திருக்கிறோம் எனறு அங்கே பேசினால், அங்கே உளளவர்கள் சொல்வார்கள் — பிரான்சு நாட்டுக்காரனாக இருந்தால் கையிலே பிரெஞ்சு நாட்டு வரலாற்றைக் கொடுத்து, ஜெர்மனியனாகயிருந்தால் ஜெர்மன நாட்டு வரலாற்றைக்கொடுத்து இதைப் படித்துப் பாருங்கள், பிறகு தனி நாட்டின் அவசியம் தெரியும் என்று திருப்பி அனுப்புவார்களே தவிர, இபபொழுது அன்பாகக் கொடுத்து அனுப்புகிறார்களல்லவா சிறுத்தைக்குட்டி, கரடிக்குட்டி, மான் குட்டி! அப்படிக்

**திராவிடன்**
போன் எண். **55087**
16/99 அம்மன் கோயில் தெரு,
சென்னை 1.

# மாதவி அங்கே! கண்ணகி இங்கே!

கொடுத்து அனுப்பமாட்டார்கள். இது தெரிந்த காரணத்தாலே தான் பண்டித நேரு அங்கே போனால் தனி நாடுகள் சுதந்திரத்தைத்தான் ஆதரிக்கிறார் — அல்ஜீரியாவுக்குத் தனிச் சுதந்திரம் கொடு என்று சொல்லுகிற நேரத்தில் அல்ஜீரியாவும் டுனீஷியாவும் ஒன்றாயிருக்கட்டும் என்கிறாரா? சொல்லுவதில்லை! ஆனால் அல்ஜிரியாவிலே யார் இருக்கிறார்கள்? முஸ்லீம்கள்! டுனிஷியாவிலே யார் இருக்கிறார்கள்? முஸ்லிம்கள்! இரண்டுபேரும் எங்கே நோக்கித் தொழுகிறார்கள். ஒரே திக்கு நோக்கி! இரண்டுபேருக்கும் ஆண்டவன் யார்? அல்லா! இரண்டுபேருக்கும் என்ன வேதம்? ஒரே குரான்'. ஆனால், அல்ஜீரியா வேறாகத்தான் இருக்க வேண்டும், டுனீஷியா வேறாகத்தானிருக்க வேண்டும் என்று அங்கே சொல்லுகிறார். இங்கே வருகிற நேரத்தில்தான் சொல்லுகிறார் திராவிட நாடு தனியாகத்தான் இருக்கவேண்டுமா என்று! எப்படியென்றால், ஒருவனுக்கு வெளியிடத்திலே—மனைவியை விட்டு—வேறு தொடர்பு ஏற்பட்டு விடுகிறது என்றுவைத்துக்கொள்ளுங்கள். அதற்குப்பிறகு அவன், தன் மனைவி அலங்காரம் செய்து கொள்ளக் கூடாதென்று இவனே விரும்புவான். வழக்கம்போல் மனைவி அலங்காரம் செய்து கொண்டால் வீட்டுக்குள் நுழைகிறபோதே அருவருப்போடு பார்த்து, ‘என்ன முகத்திலே அவ்வளவு பவுடர்?” — இவனே கேட்பான். இவன் எந்த இடத்திலேஇருந்து வருகிறான் என்றால், அங்கே இருந்த பவுடர் உள்ளங்கையிலே ஒட்டியதற்கு சோப்பு போட்டுக் கழுவவேண்டும். அவ்வளவு பவுடர் கப்பிய இடத்திலிருந்து வருகிறான். அது அங்கே பிடித்தது. இங்கே தன்னுடைய மனைவி பவுடர் அடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்ததும், உனக்கேன் இவ்வளவு பவுடர்? என்று கேட்பான். அப்பொழுதே நீங்கள் தெரிந்து கொள்ளலாம் இவன் ஏதோ ஒரு ‘மாதவி’ தேடிவிட்டான் என்று! அதே முறையில் பண்டித் நேருவுக்கு மாதவி அங்கே! கண்ணகி இங்கே! அங்கே போனால்—தனிநாடு இருக்கட்டும் என்கிறார். இங்கே வந்தால் இது என்ன முகத்திலே பவுடர் இருக்கிறதே. என் நாடு உன் நாடு என்கிற பேச்சு வேண்டாம். இமயமுதல் குமரிவரை ஒன்று என்று இங்கே சொல்லுகிறார். ஆகையினாலே காங்கிரஸ் நண்பர்களுக்கு நான் சொல்லுவேன் பண்டித நேரு அகில உலகத்திலேயுள்ள பல நாடுகளைச் சுற்றிப்பார்த்தவர்; அந்த நாடுகளை இன்று நீங்கள் பூகோளத்திலே பாருங்களேன்—அண்ணாதுரையைப் பார்க்க வேண்டாம் — ‘திராவிடநாடு’ பத்திரிகையை, ‘நம்நாட்டை’ ‘முரசொலி’யைப் பார்க்கவேண்டாம்-- இவைகள் எல்லாம்பாபிகளுடைய கரங்கள் பட்டவை!—உங்கள் வீட்டிலே இருக்கிற பையன் வைத்திருக்கிற பூகோளப் படம், இதை வைத்து ஐரோப்பாக் கண்டத்திலே எத்தனை தனி நாடுகளிருக்கின்றன என்பதனையும், அந்த நாடுகளுக்கிருக்கின்ற இயற்கை வளம் நாம் சொல்லுகின்ற திராவிட நாட்டுக்கு இருக்கின்ற இயற்கை வளம், அந்த நாட்டு எல்லை; நமது எல்லை, அந்த நாட்டு மக்கள் தொகை; நமது திராவிட நாட்டு மக்கள் தொகை, அவர்கள் வரலாறு; நமது வரலாறு இவைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்.—ஒரு கணம். பிறகு, உங்கள் தீர்ப்பைத் தாருங்கள். அதைக்கூடப் பார்க்காமல், நாங்கள் திராவிடநாடு என்றால் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று எதிர்த்துச் சொன்னால் என்ன பொருள்? நீங்கள் படிக்காத ‘அட்லாஸ்’—காங்கிரஸ் நண்பர்களுக்குச் சொல்லுவேன்—உங்கள் மகன் படித்துக் கொண்டிருக்கிறான். அண்ணன் படிக்காத அட்லாஸ் தம்பி படித்துக்கொண்டிருக்கிறான். எந்தெந்த அமைச்சர் வீட்டில் வயதுக்கு வந்த ஆண்மகன் இருக்கிறானோ அவர்கள் அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகம்—தெளிவாக அமைச்சர்கள் அறிந்து கொள்ளட்டும். நல்ல வேளையாகக் காமராசருக்குக் கலியாணம் ஆகாத காரணத்தால் அந்த “ஆபத்து” இல்லையே தவிர, அவருக்கும் காலா காலத்திலே கலியாணம் ஆகி, பிறக்கவேண்டிய வயதிலும் குழந்தை பிறந்திருந்தால் அவன் இங்கே எங்கேயாவது தான் உட்கார்ந்து கொண்டிருப்பானே தவிர, காங்கிரசிலே இருந்திருக்கமாட்டான். ஏனெனில் காமராசர் தான் ‘அட்லாஸ்’ படிக்க நேர்ந்ததில்லையே தவிர, அவருக்குப் பிள்ளை பிறந்திருந்தால் அட்லாஸ் படித்திருப்பான் அல்லவா? அட்லாஸ் படித்தால் அண்ணாதுரை சொல்வது நியாயம் என்று தெரியுமே! ஆகையால் இங்கேயே தானிருப்பான். அது தெரிந்துதான் காங்கிரஸ்காரர்கள் இப்போது பெரியவர்களை யெல்லாம் விட்டுவிட்டார்கள். மாணவர்களே! வாலிபர்களே!!—இரண்டே வார்த்தை—திராவிட முன்னேற்றக் கழகத்தார் அழகாகப் பேசுவார்கள் — மயங்காதீர்கள். நான் உண்மையிலேயே எண்ணுகிறேன்—இப்படிச் சொல்லி அவர்களை எப்படித் தடுக்க முடியும்? “அவர்கள் நன்றாகப் பேசமாட்டார்கள். ஆகவே போகாதீர்கள்,” என்றாலாவது போகாமலிருக்கக்கூடும். அவர்கள் அழகாகப் பேசுவார்கள்—அங்கே போகாதீர்கள், என்று ஒரு பைத்தியக்காரன் சொன்னால் யார்தான் வராமலிருப்பார்கள்? யாரோ அழகாகப் பேசுவார்களாமே! கேட்கலாம் என்று பலர் புதிது புதிதாக நமது கூட்டங்களுக்கு வரத்தான் செய்வார்கள். ஒரு சமயம் நமது காங்கிரஸ் மந்திரிகள் உள்ளூர நமது இயக்கம் வளரவேண்டுமென்கிற ஆசை தோன்றி இப்படிச் சொல்லிவைத்தால்தான் மக்கள் ஏராளமாகப் போவார்கள், ஆகையால் அப்படிச் சொல்லிவைப்போம் என்று சொல்லுகிறார்களோ என்னவோ—இந்த விந்தையான உலகத்திலே—என்னென்ன விசித்திரங்கள் நடக்குமென்று உறுதி சொல்ல முடியாது!!

மாணவர்களையும் வாலிபர்களையும் “அடுக்கு மொழி பேசுவார்கள்—அழகாகப்பேசுவார்கள்—சுவைபடப் பேசுவார்கள். நீங்கள் போய் அதனை கேட்காதீர்கள் கேட்டாலும் மயங்காதீர்கள். மயங்கினாலும் அதற்கு பிறகு நாங்கள் வந்து சொல்லுவோம். நாங்கள் அடுக்கு மொழி பேசமாட்டோம். நாங்கள் மயங்கவைக்கமாட்டோம், நாங்கள்

# எங்கும் நிறை நாதம்!

காரண காரியம் எடுத்து சொல்ல மாட்டோம். நாங்கள் எங்கள் மனதிற்கு பட்டதைச் சொல்லுவோம், நம்பத்தான் வேண்டும் என்று இன்றையதினம் காங்கிரஸ் மந்திரிகள் மூலைக்கொருவராகப் பிரசாரம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஒன்று அவர்களுக்குச் சொல்லுவேன், நீங்கள் ஒவ்வொரு புதிய பள்ளிக்கூடம் கட்டுகிறீர்களே, அந்த ஒவ்வொரு புதிய பள்ளிக்கூடத்திலேயும் 50 திராவிட முன்னேற்றகழக எதிர்கால உறுப்பினர்கள் இருக்கிறார்கள். உங்களுக்கு தெரியாது. நீங்கள் ஒவ்வொரு கல்லூரிக்கும் மான்யம் தருகிறீர்கள், நீங்கள் தருகின்ற மான்யத்திலே உங்களுக்குத் தான் வேண்டியவர்கள் கிடைக்கின்றார்களென்று கருதாதீர்கள். நீங்கள் மான்யம் கொடுக்கின்ற நேரத்திலேயெல்லாம் அங்கிருந்து தி. மு. கழகத்திற்கு இரண்டு பேராசிரியராவது கிடைக்கும். நீங்கள் திருக்குறளை மலிவுப் பதிப்பு வெளியிடுகின்றீர்கள். அந்த மலிவுப் பதிப்பு திருக்குறளை வாங்கின 100 பேரிலே ஒரு 60 பேர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே தான் ஈடுபாடு கொண்டவர்கள். காரணமென்ன? எங்கேயாவது தொலைவிலே புல்லாங்குழல் சப்தம் கேட்டால் நம்மில் யாவரும் அந்தப் பக்கம்தானே திரும்புவோம். ஊதுகிறவன் யார் என்று கேட்டுவிட்டா திரும்புவோம்? என்ன சத்தமென்று திரும்புவோம். அதைபோல இன்றைய தினம் தி. மு. கழகத்தினுடைய 'திராவிட நாடு' என்ற இலட்சியம் எங்கும் நிறைந்த நாதமாகிவிட்டது. இதிலிருந்து யாராலும் தப்பித்துக்கொள்ளமுடியாது. இரு செவிகளையும் பொத்திக்கொண்டாலும் பயனில்லை. கண்களை இறுக மூடிக்கொண்டாலும் பயன் இல்லை. கருத்தை வெளியிலே சிதறவிடவேமாட்டேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டாலும் பரவாயில்லை.

ஆகையினாலேதான் காங்கிரஸ் அமைச்சர்களுக்கு நான் ஒன்று சொல்லுவேன். நீங்கள் நேரு பண்டிதரிடத்திலே நேர்மையாக எடுத்து சொல்லி 'திராவிட நாடு பிரிவினைக்கு இன்னின்ன காரணங்கள் இருக்கின்றதாகச் சொல்லுகின்றார்கள்—அதற்கு ஏதாவது பதிலிருந்தால் சொல்லுங்கள் என்று நேரு பண்டிதரைச் சொல்லச் சொல்லுங்கள். நான் உங்களைச் சொல்லச் சொல்லவேயில்லை. காங்கிரஸ் மந்திரிகளிலே சிலர், 'உங்களுக்குத் திராவிடநாடு தரமாட்டோம்' என்றுகூடப் பேசுகின்றார்கள். எனக்கு வருத்தமாயிருக்கிறது. வருத்தம் மட்டுமல்ல வெட்கமாகக்கூட இருக்கிறது.

காரணம் என்னவென்றால் நாம் இவர்களைப் பார்த்துக் கேட்கவில்லை. பாபம், இவர்களிடத்திலே ஏது? தருகின்ற அதிகாரம்! தரவேண்டியவன், 'ஐயன்—ஆசியாவின் ஜோதி — அமெரிக்காவின் செல்லப்பிள்ளை — பிரிட்டனின் நண்பன் — பண்டித நேருவிடம் இருக்கிறது. இங்கேயிருக்கிற கக்கனிடமும் காமராஜரிடமும் இல்லை.

இவர்களிடம் இருப்பதெல்லாம் சிரித்துப் பேசினால் 'ஏதாவது பெர்மிட்', கோபமாகப் பேசினால், 'காங்கிரசிலிருந்து ஒரு வருடத்துக்கு நீக்கி விட்டோம்—இந்த இரண்டுதான் இருக்கிறதே தவிர, திராவிட நாடு பிரித்துத் தருகிற அதிகாரம் டில்லியிலே இருக்கின்றது. அங்கே பார்த்துத்தான் நாங்கள் கேட்கிறோமே தவிர, இங்கே பார்த்து அல்ல! அதே நேரத்திலே நாட்டு மக்களுக்கு நாங்கள் சொல்லுகிறோம், வடநாடு தென்னாடு என்பதற்குள்ள இந்தப் பேதங்களை எடுத்துக்காட்டி நாட்டு மக்களிலே அதிலும் கிராமப் புறங்களிலே நான் போய்ப் பார்க்கிறேன் கிராமத்துப் பெரியவர்கள் வடக்கு தெற்கு என்றால் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்று காங்கிரஸ் மந்திரிகள் ஒரு தப்புக்கணக்குப் போட்டிருக்கிறார்கள். ஏனென்றால் பட்டணத்துக்கு வந்தால்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்—பக்ரா நங்கல் —ஹிராகுட் அணைக்கட்டு, சிந்திரி இவைகளையெல்லாம் சொல்லி மக்களை எண்பிக்கவைக்கிறார்கள்.

கிராமத்துக்குப் போய் பக்ரா நங்கல் என்றால் யாருக்குத் தெரியும்? சிந்திரி என்றால் யாருக்குத் தெரியும்? சித்தரஞ்சன் என்றால் யாருக்குத் தெரியும்? — அண்ணாதுரை கூட்டத்தார் பேசுகிற பாஷை புரியாது; காங்கிரஸ் பாஷை ஒன்றுதான் அவர்களுக்குப் புரியும்.

கிராமத்திலே போய் தி. மு. க. பரவாது என்று காமராஜர் உள்பட நம்பிக்கொண்டிருந்தார்கள். 'இருந்தார்கள்' என்று இறந்த காலத்தில்தான் சொல்லுகின்றேன் — ஏனென்றால் அந்த நம்பிக்கை அவர்களுக்கு இபபோது மெள்ளமெள்ள தெரிந்துகொண்டு வருகிறது. கிராமப்புறத்திலே போய் நான் பார்க்கின்ற அளவிலே நகரப்புறத்திலே உள்ளவர்களுக்கு புள்ளி விபரங்களை சொன்னால்தான் வடநாடு தென்னாடு புரிகின்றது—ஹிராகுட் அணைக்கட்டைக் காட்டினால்தான் வடக்கு தெற்கு தெரிகின்றது — கிராமப் புறத்தாருக்கு பக்கத்திலேயிருக்கிற இன்னொரு ஏழையைக்காட்டி அவ எப்போதோ பார்த்த மார்வாடியைக் கவனப்படுத்தி, 'இது வடக்கு, இது தெற்கு' என்றால் சுலபத்திலே புரிகிறது! பக்ரா நங்கலைக்கூடக் கேட்கவில்லை. மார்வாடியைப்பார் கடலூரிலேபோய் எவ்வளவு தளதளவென்று இருக்கிறான், உனக்குப் பக்கத் திலேயிருக்கிற தமிழனைப் பா எவ்வளவு தேய்ந்து இருக்கிறான், அது வடக்கு! இது தெற்கு! என்றால், 'ஆமாம்' என்கிறான. அது மட்டுமல்ல நம்முடைய கிராமத் துப் பெரியவர்கள் என்ன கா ணத்தினாலேயோ ரொம்ப நாள கவே வடக்கு என்றால் ஆகாம அதற்காகப் பழமொழியும் வைத் திருக்கிறார்கள். நினைவுபடுத்தினா தெரியும், — 'வடக்கே தலைவைத்து படுக்காதே!'—தமிழ் நாட்டிலே ப மொழி,-இது. ஒரு வீட்டிலே ஏதா வது ஒரு இடத்தில் வடக் தலையை வைத்துப் படுத்தா அங்கேயுள்ள பெரியவர்க 'அப்பா! வடக்கே தலைவைத்து படுக்காதே........,' என்பார்கள் என்ன காரணம்? சொல்லத் தெ யாது. ஆனால் ரொம்ப நாளாக சொல்லுகிறார்கள். நானாக என் அர்த்தம் என்று எண்ணிக்கொ டேன் என்றால் "வடக்கே த வைத்துப் படுக்காதே! வடக் அப்படிப்பட்டவன் இருக்கிறான்.

# "வடக்கே தலைவைத்துப் படுக்காதே"

தலையை அந்தப் பக்கம் வைத்தால் தலையைத் தடவி விடுவான். எழுந்திரு! எழுந்திரு!! என்பதாக நமது பெரியவர்கள் சொல்லி, இது,பழமொழியாகவே ஆகிவிட்டதென்று நினைக்கிறேன். மற்றுமொன்று, காற்று அடிக்கிறது — வடக்கேயிருந்து அடிக்கின்ற காற்றை "வாடைக்காற்று உடம்புக்கு கெடுதல், சன்னலை மூடு" — ஒவ்வொரு வீட்டிலும் நீங்கள் கேட்கலாம். ஏனப்படி, சொல்கிறார்கள்? என்ன காரணத்தினாலேயோ வடக்கேயிருந்து வருகிற காற்று, வடக்கேயிருந்து வருகின்ற எண்ணம், வடக்கேயிருந்து வருகின்ற மக்கள் யாரும் தமிழ் நாட்டுக்கு உகந்தவர்களல்ல, உரியவர்களல்ல என்ற எண்ணம் நீண்டநாளாக நம் மக்கள் மனதிலேயே ஊறிப்போயிருக்கின்றது. இப்பொழுது அவர்களிடத்திலே கொஞ்சம் அரசியல் நிலைமையை விளக்கினால், ஒரு தடவை நல்ல சாயம் போட்டுப் போட்டு சாயத்தைக் கரைத்து கொதிக்கவைத்த இடத்தில் துணியைச் சலவைச் செய்து அதிலே தோய்த்தால் சாயம் எப்படி உடனே பிடித்துக் கொள்ளுகிறதோ அதைப்போல கிராமத்து மக்கள் மனதிலே திராவிடநாடுபிடித்துக்கொள்ளுகிறது. நகரத்து மக்கள்கூட ஒரு சமயத்திலே சலனமடையலாம்! 'என்ன சார்? திராவிடநாடு கிடைக்குமா!' என்று கேட்கலாம். கிராமத்துத் தோழர்கள் உள்ளத்திலே அந்த எண்ணம் பதிந்தானபிறகு 'கிடைக்குமா?' என்று கேட்கமாட்டார்கள். "தேவையானால் பெற்றுத்தானே ஆகவேண்டும்," அதுதான் அவர்களுக்குத் தெரியும். நகரத்தாருக்கு அது தெரியாது.

"திராவிட நாடா? நமக்கு எங்கேய்யா கிடைக்கப்போவுது" என்பது நகரத்துத் தத்துவமாயிருக்கக்கூடும். கிராமத்துத் தத்துவம் ஒன்று தேவை என்பது மட்டும் அவர்கட்குத் தெரிந்துவிட்டால், "தேவையென்றால் பெற்றுத்தான் தீரவேண்டும். கிடைக்குமா, கிடைக்காதா என்று யார் கேட்டார்கள்?" என்று சொல்வதுதான் சாதாரணக் கலியாணத்திலே நீங்கள் பாருங்கள் "வயசு பதினெட்டாச்சு கலியாணம் பண்ணணுமா?" என்று கேட்டால் உடனே "கலியாணம் பண்ணப் போறீங்களா! என்னய்யா, அர்த்தமில்லாத பேச்சுப் பேசறே, பதினெட்டாச்சே — கலியாணம் செய்ய வேண்டாமா" — "பெண் எங்கே?" — "அட என்னய்யா! எங்கேயாவது இல்லாமலா போகும்? கொண்டுவரேன் இல்லையா பார்!" என்று சொல்வதைப்போலத்தான் இந்த வடக்கு தெற்கு என்ற பிரச்னை கிராமப் புறத்திலே வேரூன்றியான பிறகு அவர்கள் நகரத்தாரைப் பார்த்துக் கேட்கப் போகிறார்கள்" ஏன்யா! வடக்குத் தெற்கு தெரிந்துவிட்டது. வடக்கே இருந்து தெற்கு பிரியணும், என்ன வழி?" — தெரியலியே! — "அட தெரியுதோ இல்லியோ முயற்சி எடுக்க வேண்டுமா இல்லையா?" — "எடுக்கவேண்டும்" — "வா, எடுக்கலாம" என்று கிராமம் நகரத்தை அழைக்கப் போகின்றது — ஒரு பத்தே வருடத்தில். காங்கிரஸ்காரர்கள், ஏதோ தி. மு. க,வினராகிய நாங்கள் கல்லூரியிலே படித்தவர்கள ஆங்கில நாகரீகத்தை மேற்கொண்டவர்கள் — ஆகையினால் கோயமுத்தூர், மதுரை, சென்னை, திருச்சி, திண்டுக்கல், இந்த அளவோடு நின்றுவிடுவோம் என்றுதான் கணக்குப் போட்டார்கள். முதலிலே தம்புரு மீட்டுகின்ற வித்துவான்—நீங்கள் பார்க்கலாம் —தம்பூரை மீட்டிக்கொண்டிருப்பதுபோலத் தோன்றும்; ஆனால் நன்றாகச் சுருதி மீட்டியானதும், பக்கத்திலே இருக்கிற பையனிடம் கொடுத்துவிட்டு, தன் வாயைத் திறந்து பாட ஆரம்பிப்பான். அதைப்போல நாங்கள் ஓரளவுக்கு சுருதி கூட்டியாகிவிட்டது — இப்பொழுது பாட ஆரம்பித்துவிட்டோம்.

எங்கள் பாட்டு கிராமப்புறத்திலே இனிக்கின்றது — கிராமத்தார் கேட்கின்றார்கள் — பொருளும் தெரிகின்றது — பிரச்னையையும் புரிந்துகொண்டார்கள்— இதை ஆட்சியாளர்கள புரிந்து கொண்டால் போதும்! இதுதான் நான் ஆட்சியாளர்களுக்குச்சொல்லுவது. ஆகையினாலேதான் நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் பத்து வருடம் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதற்கு நான் சென்னையிலே நடைபெற்ற கூட்டத்திலே பதில் சொன்னேன், 'துர்ப்பாக்கிய வசமாக நிதியமைச்சர் சொல்லுகிற வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலே இருக்கின்றோம். எந்தப் பத்து வருஷம் சும்மாயிரு என்று அவர் சொல்லுகிறாரோ, அந்தப்பத்து வருஷத்திலேதான் நமக்கு நல்ல நல்ல வேலையிருக்கிறது. இந்தப் பத்து வருஷத்திலேதான் நம்முடைய கருத்து புகாத நெஞ்சத்திலேயெல்லாம் புகவேண்டும், இந்தப் பத்துவருடத்திலேதான் நம்மிலே யாரார் சிதம்பரம்பிள்ளை ஆகத் தக்கவர்கள், யாரார் பகவத்சிங் ஆகக் தகுதியுள்ளவர்கள், நம்மிலே யாரார் திருப்பூர்க் குமரன் ஆகத் தயாராயிருப்பவர்கள், நம்மிலே எத்தனை பேர் தடியடிக்குத் தயங்காமலிருப்பவர்கள், நம்மிலே எத்தனைபேர் வீட்டுக்கும் ஜெயிலுக்கும் வித்தியாசம் தெரியாமலிருப்பவர்கள், நம்மிலே எத்தனை பேர் தாய்த் திருநாட்டை மீட்பதற்கு பச்சை இரத்தத்தைப் பரிமாறக் கூடியவர்கள், எத்தனை பேர் பலாத்காரவாடை ஒரு துளியும் வீசாமல், ஆட்சியாளர் வீசுகின்ற அடக்கு முறை அம்புகளை மார்பிலே ஏற்கத்தக்கவர்கள் என்பதையெல்லாம் இந்தப் பத்து வருடத்தில் கணக்கெடுக்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் அடுத்த தலைமுறை இருக்கின்றது.

ஆகையினாலே இந்தப் பத்தாண்டுக் காலத்தில்தான் நமக்கு நல்ல வேலையிருக்கின்றது — தீவிரமான வேலையிருக்கின்றது — இந்தப் பத்து வருடம் பால் பொங்கிவிடுகின்ற நேரம்! இந்த நேரத்திலேதான் கருத்துள்ள தாய், குழந்தை அழுதாலும் பால் கொடுக்கப் போகமாட்டார்கள்—பாலைக் கீழே இறக்கி வைத்துவிட்டுத்தான் அழுகின்ற குழந்தையைத் தூக்கச் செல்லுவார்கள். அதைப்போலத் தமிழன் எந்தத் துறையிலேயிருந்தாலும், எத்தகைய கருத்து மாறுபாடு இருந்தாலும் அவன் வியாபாரியாக யிருந்தாலும், தொழிலாளியாக யிருந்தாலும்,

# கிராமப்புறங்களிலே தெளிவேற்பட்டுவிட்டது

தமிழறிவு குறைந்தவனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், தாய்த்திருநாட்டைமீட்பதற்காகத் தன்னைத் தானே அர்ப்பணிப்பதற்கான ஒரு தியாக உள்ளத்தைப் பெற்றாகவேண்டும். அந்தத் தியாக உள்ளத்தைப் பெறவேண்டும் என்ற காரணத்தினாலேதான் காங்கிரசிலே உள்ள தியாகிகளை நான் மதித்துக்கொண்டே வந்திருக்கின்றேன்.

திராவிட கழகத்திலே இருந்த காலத்திலேயே, என் பேரில்அதற்காகப் பல பேர் சீறினார்கள். 1947ல் சுதந்திரம் கிடைத்தபோது, வரவேற்று எழுதினேன் — சீறினார்கள். அப்பொழுது நான் எழுதியதற்குக் காரணம. **"யாருக்குத் தியாகியை மதிக்கத் தெரிகின்றதோ, அவர்கள்தான் தியாகிகளாக முடியும்".**

திருப்பூர்க் குமரனை மதிக்கத் தெரிந்தால் நீங்களும் குமரனாக முடியும்?நீங்கள் திருப்பூர்க்குமரனை மதிக்கக் கற்றுக்கொள்ளாவிடில் நாளையதினம் திராவிட நாட்டு அறப்போருக்காகச் சிதம்பரம் கடை வீதியில் அடிபட்டீர்களேயானால் யார் உங்களை மதிப்பார்கள் ?

தியாகம் என்பது இந்தக் கட்சிக்குத்தான் சொந்தமென்று அர்த்தமல்ல; இன்ன காலத்துக்கு சொந்தமென்றும் அர்த்தமல்ல. தியாகம் என்பது முடிவு தெரியாத தொடர்கதை! அந்தத் தொடர்கதையிலே ஒரு அத்தியாயம் காங்கிரஸ்காரர் எழுதியது— மறு அத்தியாயத்தை நாம் எழுத வேண்டும். எழுதுவதற்கு நமக்குத் திராணியிருக்கவேண்டுமென்றால் எழுதப்பட்ட அத்தியாயத்தை நாம் மதிக்கவேண்டும். இந்த மதிப்பை நான் திராவிட கழகத்திலே இருந்த காலத்திலேயேஅளித்தேன்! ஆ...னா...ல்!! நான் காங்கிரஸ்காரர்களுக்குக் கசப்பு ஆனேன். சுதந்திர திருவிழா கூடாதென்ற பெரியார்,ராமசாமியிடத்திலே இரவல் கேட்டு ஓட்டுகளை வாங்குகிற அளவுக்குக் காங்கிரஸ்காரர்கள் தேர்தல்காலத்திலே மானம்—ரோஷம்—வெட்கம் எல்லாவற்றையும் விட்டார்கள்.

ஆகையினாலே இன்றைய தினமும் திராவிட இயக்கத் தோழர்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்ளுவேன் — தியாக உள்ளத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். தாய்த்திருநாட்டை மீட்பதற்கான ஆற்றலைப் பெற்றுக் கொள்வதற்கு, பிறருடைய சந்தேகத்தைப் போக்குவதற்கு, புள்ளி விபரம் கேட்போர், புள்ளி விபரம் பெறுவதற்கு, வரலாற்றைப் படித்தறியாதவர்களுக்கு நீங்கள் படித்த வரலாற்றை சொல்லுவதற்கு, இந்தப் பத்து வருடத்தைப் பயன்படுத்துங்கள். தமிழகத்திலே கிடைக்கக்கூடிய எந்த வரலாற்று ஏட்டைப் பார்த்தாலும், எந்த இலக்கிய ஏட்டைப் பார்த்தாலும், அந்தப் பரம்பரையிலே உதித்தவர்கள்தானா நாம் என்று எண்ணத்தக்க அளவிலேயே இருக்கின்றது.

வேட்டையாடிக் கொல்லப்பட்ட புலியினுடைய தோலை மாட்டி வைத்திருக்கின்ற மாளிகைக்குள்ளே ஒரு புலி நுழையுமானால், அந்தப் புலிக்கு மனிதனுக்கு இருப்பதுபோல அறிந்து கொள்கிற சக்தியிருக்குமானால், மேலே மாட்டியிருக்கின்ற புலித் தோலைப் பார்த்து என்ன பரிதாபப்படுமோ அதைப்போல் நாம், மாட்டிவைக்கப்பட்ட புலித் தோலைப் போலிருக்கின்றோம்— தமிழனுடைய வரலாறு உருப்பெற்று வருவது உயிரோடு வருகின்ற புலி, தோலைப் பார்த்து, 'என்னைப் போலத்தானே நீயுமிருந்தாய். என்னுடைய கரத்திலே இருந்த கூர்மையான நகங்களைப் போலத்தானே உன்னிடத்திலுமிருந்தது. என்னிடத்திலேயிருந்த போராடும் சக்தியும் தானே உன்னிடத்திலே யிருந்தது. ஏனிந்தத் தோலாகிவிட்டாய் ?" என்று கேட்டால் "நான் புதரிலே பதுங்கியிருந்த நேரத்தில் காதகன் என்னைக் கொன்று விட்டான்," என்று தோலுக்குச் சக்தி வந்து பேசினால் எப்படியிருக்குமோ, அந்த நிலைமை இன்றையதினம் தமிழ் நாட்டிலே இருக்கின்றது. நமக்குப் பக்கத்திலே யிருக்கின்ற தூர்த்து கிடக்கின்ற துறைமுகங்களை யெல்லாம் பாருங்கள் — இங்கிருந்தெல்லாம் பாய்மரக் கப்பல்களில் நம்முடைய காடுகளிலே கிடைக்கக்கூடிய அகிலையும் சந்தனத்தையும் நம்முடைய சாலையிலும் சோலையிலும் புள்ளிக் கலாபத்தை விரித்து ஆடிக்கொண்டிருந்த மயிலையும், இவைகளை யெல்லாம் ஏற்றி எடுத்துக்கொண்டு ரோம் நாட்டுக்குச் சென்றார்கள் என்று வரலாறு இருப்பது பொய்யென்று கருதுகிறீர்கள் ? தி. மு. க. - வா அதை இட்டுக் கட்டி எழுதியது?

அகநானூறு இயற்றியது அண்ணாதுரையா ? புறநானூறு எழுதியது மதியழகனா ? சிலப்பதிகாரம் இயற்றியது நெடுஞ்செழியனா? அல்ல, நண்பர்களே அல்ல! தமிழன் தாழாதிருந்த நேரத்தில், தமிழனுடைய மதிமயங்காதிருந்த நேரத்தில், தமிழ் துறைமுகங்கள் தூர்ந்து போகாத நேரத்தில், உலகத்திற்கும் நமக்கும் நல்ல தொடர்பு இருந்தது. அப்படிப்பட்ட நாட்டை, ஐயா, வடநாட்டோடு சண்டை போட்டு அல்ல, வடநாட்டோடு யுத்தம் செய்து அல்ல; சமாதானமாக இருந்து, நாங்கள் தனி நாடாக ஆளுகின்றோம் என்று சொன்னால், சாதாரணமாக தண்டபாணி தேசிகர் பாட்டைத்தான் உங்களுக்குக் கவனப்படுத்தவேண்டி இருக்கின்றது. "இல்லை என்பான் யாரடா" என்று கேட்பது தவிர வேறு என்ன பாட்டு பாடமுடியும்?

திராவிட நாடு எங்கே இருக்கிறது? மெத்த சரித்திரம் படித்த வித்தகர்களைப் போல திராவிட நாடு என்ற பெயர் எங்கே யிருக்கின்றது என்று கேட்கின்றார்கள், அவர்களை நான் கேட்கின்றேன் இந்தியா என்ற பெயர் எங்கே இருக்கின்றது. இராமாயணத்திலே காட்டுவீர்களா? பாரதத்திலே காட்டுவீர்களா? தேவார திருவாசகத்திலே உண்டா? அகத்திலே இருக்கின்றதா? சிலப்பதிகாரத்திலே உண்டா? ஜீவக சிந்தாமணியிலே உண்டா? திருக்குறளில் உண்டா? ஆத்தி சூடியில் உண்டா? எதிலுமில்லையே! எவனோ சொன்னான், இந்தியா என்று. அதை என்னுடைய நாடு என்று எடுத்துச் சொல்லிக் கொள்ளுவதற்கு இந்த நாட்டிலே பூகோளம் படித்தவர்களையே ஏய்க்கிறார்கள்.

தமிழகம் என்று இலக்கியத்திலே இருக்கின்றது. திராவிட திருநாடு என்று இலக்கியத்திலே இருக்கின்றது. அவர்கள் பாடுகின்ற தேசிய கீதத்தில் திராவிடம் என்று இருக்கின்றது. அதை நித்தநித்தம்உச்சரித்துக்கொண்டு என்னைப்பார்த்துக் கேட்கிறுர்கள். திராவிடம் என்று எங்கே இருக்கின்றது என்று. எங்கே இருக்கின்றது என்ருல் மகாகவி ரவீந்தர் எழுதிய பாடலில் இருக்கின்றது. சென்னை கடற்கரையிலே உள்ள டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் சிலையின் கீழே திராவிட இரத்தனம் என்று எழுதப்பட்டிருக்கின்றது. மகாபலிபுரத்திலே உள்ள சிற்பங்களுக்கு Dravidian Archaology என்று போடப்பட்டிருக்கின்றது. இவைகளெல்லாம் பொய்யுரை என்ரு பெயர்? இவைகளை யெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தாரா பொறித்தார்கள்? உன்னுடைய ஆதீனத்திலுள்ள ஆட்சியாளர்களல்லவா வைத்திருக்கின்ருர்கள்? ஆகவே, திராவிடம் என்பது கற்பனை என்று நாட்டு மக்களை இன்னமும் ஏமாற்ற முடியாது என்பதனை பணிவன்போடு காங்கிரஸ்காரர்களுக்கு நான் சொல்லிக் கொள்ளுவேன். காங்கிரஸிலுள்ள பாடுபட்ட தியாகிகளை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். தாய்த் திருநாட்டை மீட்கின்ற இந்த அருந் தொண்டில் நீங்கள் எங்களோடு ஒத்துழையுங்கள் என்று சொல்லி. அவர்கள் வருவதற்கு காலம் பிடிக்கும் எனருல், அதுவரையிலும், தி. மு. க. வைக் கட்டிக் காப்பாற்றுவதற்கு ஏற்ற ஆற்றல் உங்களிடத்தில் இருக்கிறது; அறிவு உங்களிடத்திலே நிரமப இருக்கின்றது. தி. மு. க. விடத்திலே நிறைய அனபு இருக்கின்றது. இவைகளைத்தான் உறுதுணையாக நம்பிக்கொண்டு 15பேர் சட்டசபையிலும், 2 பேர் பாராளுமன்றத்திலும் இருக்கின்ருேம். எங்கள் கடமையை நாங்கள் நிறைவேற்றுவோம். நாங்கள் சபலப்பட்டால் திருத்துங்கள்; தவருன பாதையில் செல்வோம் எனறு தெரிந்தால் தயக்கமில்லாமல் எங்களுக்குத் திருத்தம் அளியுங்கள். ஆனல் எபபோதும் எங்களுக்குத் துணை இருங்கள் என்று சொல்லி உங்களிடமிருந்து விடை பெற்றுக்கொள்ளுகினறேன். ★

# 'வால்' தேடுவோர்!

ஐயோ, பாபம்! அமைச்சர்களையும், அவர்களைக் காப்பாற்றும் காங்கிரசையும் நினைக்கும்போது, அனுதாபமே வருகிறது, நமக்கு. ஆண்டு பத்தாகியும், அவர்களுக்கு, இன்னும் இருக்கிற ஒரே ஒரு அஸ்திரம் என்ன தெரியுமோ? நாம் அந்நியருக்கு வால் பிடித்தவர்களாம்! இதையே அன்றும் சொல்லினர் — ஆயிரமுறைகள் பதிலளித்துவிட்டோம் — எனினும் சொல்லுகின்றனர்! இப்போது புது காங்கிரஸ் தலைவராக்கப்பட்டிருக்கும் ராஜாராம் நாயுடு (ஒழிக சாதி பேதம்) செல்லுமிடந்தோறும், இந்தப் பல்லவியைப் பாடத் தவறுவதில்லையாம். யார் வால் பிடித்தவர்கள்? என்பதை, மக்கள் அறிந்துகொண்டுவிட்ட காலம் இது. அப்படியே நாம் வால் பிடித்தவர்கள் என்றே வைத்துக்கொண்டாலும், "அதற்கென்னய்யா... அப்படியே இருக்கட்டும். பத்தாண்டுகளுக்கு முன்தானே, வால் பிடித்தார்கள், அந்நியர்களுக்கு. இப்போது இல்லையல்லவா? பிறகு ஏன் பேசுகிறீர்கள்!", என்று கேட்குமளவுக்கு அரசியலறிவு வளர்ந்திருக்கிற நேரம். இருந்தும், காங்கிரசால் உலவுபவர்கள், செல்லுமிடந்தோறும் இதையே செப்புகிறுர்கள்! இவர்கள் மட்டுமல்ல, கம்யூனிஸ்டுகள் இருக்கிறுர்களே அவர்களும் "தி. மு.. க. யார் தெரியுமா? அவர்கள் வழிவழி என்ன தெரியுமோ? வெள்ளைக்காரர்களுக்கு வால் பிடித்தவர்கள்!", என்று முடிக்கிறுர்கள். தொடங்கிய கட்டுரையை முடிக்கத் தெரியாவிட்டால், தி. மு. க. வைப் பற்றி என்ன பேசுவது என்று தெரியாவிட்டால், அதற்கு இன்றைய தினம் உள்ள இந்த அகில இந்தியக் கட்சிகளுக்கு உள்ள ஒரு குறுக்கு வழி, "அவன் அந்நியர் வால்பிடித்தவன்", என்று கூறுவதுதான் இந்த வழி, காலங் கடந்தது! மக்கள் கவனத்தை விட்டும் மறைந்த ஒன்று!!— எனினும், விடாப்பிடியாக, இதையே கூறுகின்றனர். தி. மு. க. மீது குறை கூற விஷயங்கள் இல்லாததால் ஏற்பட்ட 'பஞ்சமே' இதற்குக் காரணமாகும். அனுதாபப்படுகிறேம்.

இப்படிப் பேசுகிறுர்களே, 'அந்நியர்களுக்கு வால் பிடிப்பவர்கள்! வால் பிடிப்பவர்கள்! என்று, யார் வால் பிடிக்கிறுர்கள், யார் அந்நியனை ஆவலோடு எதிர்பார்க்கிறுர்கள் என்று ஒரு நிமிடம் எண்ணிப்பார்த்தால், வேடிக்கையும் வேதனையும் அலை மோதுகிறது. கம்யூனிஸ்டுகளை விட்டுத் தள்ளுவோம்—அவர்களைத்தான், 'மாஸ்கோவின் ஒலிபரப்பிகள்', என்று பலர் கூறுகின்றனரே!

இந்த காங்கிரசாரின் கதி என்ன? வால் தேடும் கட்டத்திலிருக்கிறுர்கள்! பத்தாண்டுகளுக்கு முன்பு, எப்போதோ வெள்ளையன் இங்கு ஆண்ட போது, நாம் வால் பிடித்தோம் என்கிறுர்கள். அது உண்மையா, பொய்யா என்பது ஒருபுறமிருக்க, உண்மையில் இன்றைய தினம் காங்கிரஸ் அதிபர்கள், பிடிப்பதற்கு எங்கே வால் கிடைக்கும் என்று தேடுகிறுர்கள் — தேடித்தேடி அலைகிறுர்கள்.

**700 கோடி ரூபாய் இன்னும் தேவைப்படுகிறதாம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு.**

அணைத்துக் கொஞ்சி, ஆகாய விமான தளம் வரை போய் வழியனுப்பி, "அன்பரே! நண்பரே! எப்படியாவது முயற்சி செய்க" என்று நேரு பண்டிதர், சர்வபள்ளி ராதாகிருஷ்ணனை அனுப்புகிறுர், கீழ்த்திசையிலுள்ள அந்நிய நாடுகளுக்கு, எதற்கு? பணத்திற்கு!!

நியுயார்க்கிலிருந்து, அபயக் குரல் தருகிறுர் பிர்லா. "நான் இங்கே பலரிடம், பேசினேன். இந்தியா கம்யூனிஸ்டுகளின் வலையில் விழுந்துவிடாது என்பதை எடுத்துச் சொன்னேன். பலருக்கு நல்ல அபிப்பிராயம் உண்டாகியிருக்கிறது. இந்தியாவுக்கு உதவி கிடைக்கலாம்" என்று அறிவிக்கிறுர், அவர். பிர்லாவை, அமெரிக்காவுக்கு அனுப்பியது நேரு! அங்கே யாருடைய வாலைப் பிடிக்கலாம், வால் கிடைக்காவிடில் காலைக் கூட பிடிக்கத் தயார், பணம் கிடைத்தால் போதும் என்று படாத பாடுபடுகிறுர், பண்டிதர்.

பிர்லா போனது போதாதென்று நிதிமந்திரி டி. டி. கே. யையும் அனுப்பி இருக்கிறுர்.

இப்படி அந்நியர்களைத் தேடி, அவர்கள் தம் உறவுநாடி ஓடுகிறுர் பண்டித நேரு! அப்போதாவது, 700-கோடி கிடைக்காதா என்று எதிர்பார்க்கிறுர்!!

இது, நிலைமை.

இந்த இலட்சணத்தில், தனிநாடு கோரி, எவருடைய அடிமைத்தளையையும் நம்மைப் பிணிக்கக்கூடாது என்று கூறும் நம்மை 'வால் பிடித்தவர்கள்' என்று வாய்ப்பறை சாற்றுகின்றனர், காங்கிரஸ்காரர்கள். 'இரவலில்' ஆசைகொண்ட 'ஜனசக்தி'களும் அப்படியே செய்கின்றனர். விந்தைதானே!!

★

# மலர்கள்

நோக்குமிடமெங்கும் மலர்கள். மரங்களிலே, செடிகளிலே, கொடிகளிலே, மங்கையரின் கூந்தலிலே எங்கும் மலர்! மணம்! இந்த மலர்களில்தான் எத்தனை வகை! முருக்கவிழ்ந்த ரோஜா! சிரிக்கும் செவ்வந்தி! போதையூட்டும் மல்லிகை. அப்பாடி! இந்த மலர் வகைகளுக்கு ஒரு முடிவே இல்லையா...? குளங்களிலே, குட்டைகளிலே, தரையிலே, மரத்திலே, வேலிகளிலே எங்கும் மலர் மயம் தான். மலர் மணத்தைச் சுமந்து வரும் அந்த இளங்காற்றுதான் எவ்வளவு இதமளிக்கிறது! இத்தகை மலர் பூக்கும் காலத்தைப் பற்றித்தான் இந்தக் கவிஞர் எவ்வளவு அழகாகப் பாடிவிட்டார்:

**கொங்கைகளும் கொன்றைகளும்**
**பூச்சொரியும் காலம்**
**கோக நகம் நகைமுல்லை**
**முகை நகைக்கும் காலம்**
**புன்னைகளும் பிச்சிகளும் மகிழ்ந்தே**
**பொற்பவள வாய் திறந்தே**
**பூச்சொரியும் காலம்.**

நந்திக் கலம்பக ஆசிரியர் பாடியுள்ள இந்த அடிகள் ஒரு அருமையான ஓவியத்தை நம் முன அப்படியே வரைந்து காட்டுகின்றன. இந்த மலர்களிலேதான் எத்தனை வகை! எத்தனை நிறம்! வண்ணத்திலே, நறுமணத்திலேதான் எத்தனை வகை!

மலர், உள்ளத்தை மலரச் செய்கிறது. பழந்தமிழ்ப் பண்பாட்டு உயர்வுக்கு ஒரு வாய் திறவாச் சான்று மலர். தமிழனின் வாழ்க்கையோடு ஒன்றியது மலர். அன்றுட வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அது பங்கு பெற்றது. ஆணும், பெண்ணும் மலர் அணிந்தனர். போர்க் காலங்களிலே அமைதி தவழும் இன்ப நாட்களிலே, விழவுகளிலே—எப்போதும் மலர் அணிந்தனர். போரிலே வெற்றி பெற்றதும வாகை சூடினர். புறத்துறைப பாடல்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு மலரின் பெயரை இட்டனர். பழந்தமிழன் மலருக்கு இன்றியமையாததொரு இடமளித்தான்.

*

பழந்தமிழ் இலக்கியங்கள் மலருக்குச் சிறந்த இடம் அளிக்கின்றன. சிலப்பதிகாரம் புகார்க் காண்டம் மலரின் குவியல். "அரும்பவிழ் முல்லையொடு நிகழ் மலர் நெல்தூவி அகநகரை அணி செய்யும்" காட்சியை இங்கே காணுகிறோம். பெரும் தொகை கொடுத்து மலர் மாலை வாங்கி மாதவி மனையடைந்த கோவலனையுமிங்கேதான் காணுகிறோம். 'மணிப்பூ ஆடை அது போர்த்து' காவேரி மெல்ல அசைந்து நடக்கும் அழகிய நடையையும் இங்கேதான் கண்டு மகிழுகிறோம்.

ஒரு அருமையான கட்டத்தில் மலரின் உவமை மூலம் எண்ணிய கருத்தை மிக அழகாகக் கூறுகிறார் இளங்கோ அடிகள். கோவலனும் கண்ணகியும் ஒரு நாள் மாலைக் காலத்தில் இன்ப வெள்ளத்தில் மிதக்கின்றனர். மதி தரும் மயக்கத்தோடு மாலைக் காற்றும் மலரின் மணமும் இணைய இருவரின் உள்ளமும் ஒன்றுகி விடுகின்றன. இந்தக் காட்சி எப்படியிருந்தது தெரியுமா? 'தாரும் மாலையும் மயங்கியதுபோல' என்று மிக அழகாக, நாகரிகமாக வருணித்துவிட்டார் அந்த ஒப்பற்ற புலவர் பெருமான்.

மங்கையருக்கு — தமிழ்மங்கையருக்கு — மலர் என்றால் உயிர். இழிகுலப் பெண்களும், கடைச்சியர்களும் மலர்களிடையே வாழ்ந்த விதத்தைப் பட்டினப் பாலை படம்பிடித்துக் காட்டுகிறது. மலரணியாத் தலையை 'வறுந்தலை' என்று பழந்தமிழ்ப் புலவர்கள் வருணிக்கின்றனர்.

வெளியிலே நலங்கிள்ளியின் படைகள் சுற்றி நிற்கின்றன. உள்ளே மன்னன் நெடுங்கிள்ளி செய்யும் வகையறியாது சாம்பிக் கிடக்கின்றான். புலவர் கோவூர்க் கிழார் நெடுங்கிள்ளியின் மறத் தன்மையைத் தட்டிவிட்டு முடிவு காண முயலுகிறார். நாட்டின் நலிவுற்ற நிலையை விளக்க ஒரு செய்தியை எடுத்துக்கொண்டார். "மலரணிந்து மகிழ்ச்சியோடு காட்சியளிக்கவேண்டிய மங்கையரின் கூந்தலிலே மலர் இல்லை. மலரற்ற கூந்தலை வாரி முடிகின்றனர். அந்த அளவுக்கு அல்லல் நாட்டைக் கப்பி நிற்கிறது" என்று கூற நினைத்த அந்தக் கவிஞர் "மகளிர் பூவில் வறுந்தலை முடிப்பவும்" என்று மிக அழகாக விளக்கும் திறன் பாராட்டுதற்குரியது.

*

மலர்கள் ஏன் இப்படிப் பூத்துக் குலுங்குகின்றன? இயற்கை ஏன் இப்படி இன்ப இலக்கியமாகத் திகழுகிறது. தென்றல் ஏன் வீசுகிறது? எல்லாம் மனிதனுக்காகவே என்கிறது கவியுள்ளம். ஆனால் விஞ்ஞானியின் உள்ளம் வேறு காரணம் தருகிறது. மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலை. விஞ்ஞானி அந்த மலர்களைக் காணுகிறான். இயற்கை அலுவலகத்தில் மலர் ஒரு அடிமை என்பதுதான் அவனது முடிபு. மலர் இன்பமளிக்கும் ஒரு அழகுப் பொருள். என்றாலும் அதற்கு எத்தனையோ அலுவல்கள் இருக்கின்றன. மொக்கு முருக்கவிழ்கிறது. இணையற்ற நறுமணத்தை இளந்தென்றலிலே கலந்தனுப்பி "வருக மன்னா!" என்று வண்டை வரவேற்கிறது. 'வந்தேன் அன்பே!' என்று வண்டு வருகிறது. கூட்டுறவிலே புத்துலகம் பிறக்கிறது. பின்னர் காயாகி, கனியாகி வித்தாகிறது. இப்படி ஓயாது தன் வேலைகளை மலர் செய்துகொண்டே இருக்கிறது. மேற்கூறிய செயல்களிலே ஒன்று கூட நிகழாது இருந்துவிடக் கூடாது. ஆகையினாலே மலர் என்பது இயற்கை அலுவலகத்தில் ஒரு பணியாள் என்கிறது விஞ்ஞானம்.

கவிஞன் இயற்கையின் ஏழைக் காதலன். விஞ்ஞானி அடிமை

என்று கருதிய அதே மலர் கவிஞனுக்கு உணர்ச்சியூட்டும் இன்பப் பொருளாக மாறு மகிழ்ச்சி தரும் மங்கலப் பொருளாகத் தோன்றுகிறது. அதன் அழகிலே உள்ளம் பறிகொடுத்து நிற்கிறான். அதன் நறுமணம் அவனுக்கு மயக்கம் தருகிறது. அதன் இதயத் துடிப்பை அவன் கேட்கிறான்.

பிறர் கருத்தற்றதென்று கருதும் பொருள்கள் கவிஞனுக்கு கருத்துக் கருவூலங்களாகக் காட்சியளிக்கின்றன. கவிஞருடன் கல்லும் கதை பேசும்; புல்லும் புகழ் பாடும். மலரின் முறுவல் அவனது கற்பனை யுள்ளத்துக்கு புதியதொரு விருந்தளிக்கும். உலகெங்கும் அழகின் இருப்பிடமாகவே அவனுக்குத் தோன்றுகிறது.

அசைந்தாடிச்செல்லும் அருவி. ஓரம் நெடுக மலர் தரும் மரங்களும், செடிகளும. மலர் பூக்கும் காலம். பூத்துக் குலுங்கும் புது மலர்கள் ஓடும் நீரிலே தெளிவாகத்தெரிகின்றன. இதை உர்து கவிஞர் இக்பால் கண்டார். 'அழகி கண்ணாடியில் தன்னைப் பார்ப்பது போல மலர்கள் குலுங்கும் மரக்கிளைகள் ஓடையின் மேலே தொங்கிக்கொண்டிருக்கின்றன' என்று உவமை நயம் கமழ அவர் கூறுகிறார்.

கவிஞன் ஒரு பொருளை உள்ளத்திற்கொண்டு உலகை நோக்குகையில் கருதிய பொருளையே எங்கும் காணுகிறான். மென்மையான இன்பப் பொருள்கள் அனைத்தும் அவனுக்கு மலரையே நினைவூட்டுகின்றன. மலர் முகம், மலர்க் கை, மலர் விழி என்றெல்லாம் அவன் பாடிவிடுகிறான்.

ஒரு தலைமகன். அவன் உள்ளத்திலே தலைவியின் பேசும் கண்கள் எப்பொழுதும் வட்டமிட்டுக்கொண்டே நிற்கின்றன. எங்கு பார்த்தாலும் அந்த கண்களே! மலர்களைப் பார்க்கிறான்; அந்த பேசும் கண்கள் அங்கே தெளிவாகத் தெரிகின்றன. தன் உள்ளத்தையே அவன் கடிந்துகொள்ளுகிறான். 'மலர்கள் எங்கும் மலர்ந்து கிடக்கின்றன; எல்லோரும பார்க்கிறார்கள்; முகர்ந்து மகிழ்கிறார்கள். ஆனால் என் தலைவியின் கண்களோ என் தனி உரிமை! என்னைத் தவிர வேறு யாருமே அதைப் பார்க்கமுடியாது" என்று தனக்குள்ளே கூறி மகிழுகிறான். இதை எவ்வளவு உயிர்க்களையுடன கூறுகிறார் வள்ளுவர்—

"மலர் காணின் மையாத்தி நெஞ்சே; இவள்கண்
பலர் காணும் பூ வொக்கு மென்று"

இந்தத் தலைவனுக்கு மலர்கள் காதலியின் 'மாமலர் நெடுங் கண்ணை' நினைவுபடுத்தின.

மலர்களைக் குழந்தைகளைப் போல கருதிப் பாதுகாப்போரும் உண்டு. மலர்களைக் கொய்யாது அவற்றைச்செடியிலேயே பார்த்து மகிழும் மனப் பண்பு படைத்தோரும் உண்டு. கவிஞர் சோலைக்குச் செல்லுகிறார். மலர்கள் அசைந்தாடுகின்றன. அவற்றைப் பார்த்து கவிஞர் இக்பால் அழகாகக் கூறுகிறார். அழகூட்டும் மலர்களே! நான் மலர் பறிப்பவன் அல்ல எனபதை உங்களுக்கு எப்படி உணர்த்துவேன! ஓ மலர்களே! இந்தக் கைகள் அத்துணைக் கொடியவைகள் அல்ல. வானம்பாடியின் கண்கொண்டு உங்களை நோக்குகிறேன். மலர் பறிப்பது கவிஞருக்கு கொடுமையாகப்படுகிறது.

மலர் எப்பொழுதும் தன் இடத்திலேயா இருந்துகொண்டிருக்கும்? தென்றலிலே நடமாடி வண்டின் மனதைக் கவர்ந்த பிறகு அது வாடுகிறது. வாட்டமுற்றஉள்ளத்தோடு தலைகுனிந்து நிற்கிறது. இத்துன்பத்தைக் கவியுள்ளம் பொறுக்குமா? **ஒரு மலர் இதழையாவது தென்றல் அசைத்தால் அதற்கு ஏற்படும் துன்பம் என் உள்ளத்திலே எதிரொலிக்கிறது. கண்ணீர் துளியாக வெளிப்படுகிறது"** என்று பாடும் கவிக்குயில் இக்பாலின் மனப்பண்பின் உயர்வை எப்படித்தான் போற்றுவது!

வாழ்வின் கோடையை அடைந்துவிட்ட மலர் தரையை நோக்கிக் குனிந்து நிற்கிறது. இதை ஆங்கிலக் கவிஞர் மூர் காணுகிறார். **"மலரே! நீ மட்டும் செடியில் ஏங்கி நிற்கவேண்டாம். தோழர் எல்லாம் தூங்குகின்றனர். நீயும் அவரோடு தூங்குவாய். உன் தோழர் இறந்து போனார். மணம் இழந்து உறங்குகிறார். நீயும் அவரோடு நித்திரை செய். தரையில் இலைகளைப் பரப்புவோம்"** என்று அவர் ஆறுதலளிக்கிறார் இறுதிநிலை அடைந்துவிட்ட மலருக்கு. இந்த ஆறுதல் மொழி மலரின் செவிக்கு எட்டுகிறது. தனது முடிவை வருங்கால முணர்ந்த ஒரு வீரனைப் போல அது மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுகிறது

இன்ப மணம் வீசி நின்ற அந்த இனிய மலர் வாடிப்போய் கீழே விழுந்துவிடுகிறது. கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. கவியுள்ளம் மீண்டும் அதைக் காணுகிறது. 'முறுக்கவிழ்ந்தது மணம் தந்து மகிழ்ந்து நின்றது. நேரம் கழிய வாடி விழுந்தது. இது இயற்கை. ஆனால் கவியுள்ளம்இதை மறந்துவிடுகிறது. பிரௌனிங் சீமாட்டி வாடிய மலரை கண்டு உள்ளம் வருந்துகிறார். 'வாடிய ரோஜாவே! உனது மனங்கவரும் பொன்னிறம் எங்கே? இணையற்ற உன் இனிமை எங்கே? எங்கே உன் மென்மை? உனது நறுமணத்தை நாடிவந்த தென்றல் இனி உன்னிடம்வருமா? உன் நிறத்துடன் தண்ணொளியைப் பொருத்தி இன்பம் கண்ட கதிரவனொளி ஏன் உன்னைப் புறக்கணித்துவிட்டது? உனது நறுமணங்கமழும் இனிய உடலைத் தனது இருப்பிடமாகக்கொண்டு மகிழ்ந்த பனித்துளி எங்கே மறைந்தது? உனது குன்றா இளமையைக் கண்டு உன்னைத் தன தாக்கிக்கொள்ள முயன்ற ஈ உன்னை மறந்துவிட்டதா? கவியுள்ளம் வினாக்களை அடுக்கிக் கொண்டேபோகிறது. சோர்ந்து வாடிக்கிடக்கும் மலர் தேம்பித் தேம்பி அழுகிறது. இந்த அழு


புதிய நாடக
அரங்கேற்று விழா
—(o)—
28—9—57 சனிக்கிழமையன்று
ஆத்தூர் ஸ்ரீதரன் டாக்கீசில்
கலைஞர் மு. கருணாநிதி
M. L. A., அவர்கள் தலைமையில்
திரு. ப. கண்ணன் அவர்கள் தீட்டிய
★ நந்திவர்மன் ★
நாடகம் மாலை 7-30 மணிக்கும்,
இரவு 10-30 மணிக்கும்
நடைபெறும்.

குரல் கவிஞர் உமர்கய்யாமுக்குக் கேட்கிறது. கவிஞர் தேசிகவிநாயகத்துக்கும் கேட்கிறது.

மலரின் துன்பம் இருவகை. மலர் தன் உயிருக்குயிராகத் தன்னுள்ளே அடக்கிக்கொண்டிருக்கிறது தேனை. இதை யாருமே பருகிவிடக்கூடாது என்பதற்காக எத்தனை பாதுகாப்பு! ரோஜாவைச் சுற்றிலும் முள். இதழ்கள் குவிந்திருக்கின்றன. அருகேவரும் வண்டைத் துரத்திவிடவேண்டுமென்று மலர் நினைக்கிறது. ஆனால் வண்டின் காதல் கவிதையைக் கேட்டவுடன் அதன் கருத்து மயங்கிவிடுகிறது. ஒருகணம் மெய்மறந்து திகைத்து நிற்கிறது. இதைத் தனது நன்மைக்கு பயன்படுத்திக்கொண்டு வண்டு உள்ளே சென்று தேனைப் பருகிவிட்டு ஓடிவிடுகிறது. தன்னிடமிருந்த இன்பக் கருவூலத்தை இப்படிக் கள்ளத்தனமாகப் பறித்துச்சென்று தன் முடிவுக்கு வழி தேடிய வண்டை எண்ணிக் கண்ணீர் விடுகிறது மலர். இதை கவிமணி தே. வி. மிக அழகாக வருணிக்கிறார்.

ஆனால் உமர்கய்யாமின் செவியில் விழுந்த அழுகைக் குரல் வேறு. உலக வாழ்வை நீத்துச் செல்லும் காலத்திலும் வாழ்ந்த இடம், இன்பமடைந்த இடம் என்றெல்லாம் ஒருவிதப்பற்று உள்ளத்தை ஆட்டிப்படைக்குமல்லவா? வீழ்ந்து கிடக்கும் மலரும் இதைச் சொல்லித்தான் அழுகிறது. 'மலர்ந்த முகமாய் விளையாடி நான் முன்னர் மகிழ்ந்த இடம் இது' என்று சொல்லி மலர் கண்ணீர் உகுக்கிறது. இத்தகைய பற்றும் பாசமும் உலகனைத்துக்கும் உரியது.

*

மலர் வேறு; தான் வேறு என்பது ஒரு நிலை. மலர்தம் நண்பன் எனக் கருதிய புலவரும் உண்டு. மலர்களுக்குப் பேசும் ஆற்றல் கிடையாது. அந்தப் பொன்னிற இதழ்களுக்குப் புன்முறுவல் பூக்கத் தெரியுமே தவிர பேசத் தெரியாது. கொய்ய வருவோர் முன்பு அது குறுநடம் புரிகிறது. ஆனால் அமைதியும் அழகும் ஒன்றி நிற்குமிடத்தில் அல்லலும் உண்டு. கவிஞன் அதன் துன்பங்களை உணருகிறான். ஆனால் அவற்றை வெளியில் யாரிடம் சொல்லுவது? தன்னைப போலத் துயருற்று வாடும் மலர்களிடம் சொல்லுவது தான் முறை எனக் கருதுகிறான். மலர்களுக்குப் பேசும் ஆற்றல் மட்டும் இருந்துவிட்டால் அவற்றின் மௌனமையான இதய ஆழத்தில் புதைந்துகிடக்கும் எண்ணற்ற இன்னல்களை அவை கூறிக்கொண்டே இருக்குமல்லவா? கவிஞர் இகபால் பாடுகிறார்:—

இந்த அழகிய மலரும் சமுதாய அமைப்பிலே என்னைப்போலவே சிறைப்பட்டு அல்லலுறுகிறது. அதன் இதழ்களின் நாவுக்குப் பேசும் ஆற்றல் மட்டும் இருந்தால் அதன் உடைந்த உள்ளத்தின் சோகக் குரலை எழுப்பிக்கொண்டே இருக்கும்.

ஆயிரக்கணக்கான மலர்கள் பூக்கின்றன புதுமணம் வீசுகின்றன; வாடுகின்றன; வந்த வழியே செல்லுகின்றன. ஒவ்வொரு மலரின் வாழ்வும் அருமையான ஒரு காவியம்.

★

# கொடுமை! கொடுமை!!

சாதியின் பெயரால் ஏற்றிவிடப்படும் வெறி எந்த அளவுக்கு ஆபத்தைத் தரும் என்பதை விளக்கும் வேதனையான செய்திகள் வந்த வண்ணமே உள்ளன முதுகளத்தூர் வட்டாரத்திலிருந்து! கள்ளரும் மறவரும் அதிகமாக வாழும் அந்த வட்டாரங்களில் பள்ளருக்கும் அவர்கட்கும் ஏற்பட்டமோதுதலில், நாடே இதுவரை காணாத அளவுக்கு **30 பேர்** மாண்டனராம். 120 வீடுகளுக்குமேல் சாம்பலாயினவாம். எரிந்த வீடுகளிலே, ஆட்களைக் குத்தி எடுத்து வீசினாராம். கம்பும் கத்தியும் பேசிக்கொள்ளுகின்றனவாம். எங்கும் பீதி! பயங்கரம்! சர்க்காரே மிரளுமளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது. ஊராரின் அட்டகாசம் போதாதென்று, அமைதி காக்கச் சென்ற போலீசார் வேறு சுட்டனராம், இரு இடங்களில். அதில் பலர் செத்தனராம்.

படுகொலைகள், எவ்வளவு சாதாரணமாகக் கருதப்பட்டிருக்கிறது அங்கே! இவ்வளவு பெரிய அக்கிரமங்களுக்குக் காரணம், கடந்த தேர்தல் என்று கூறப்படுகிறது. வெற்றிபெற்ற பார்வார்டு பிளாக் கட்சிக்கும் தோற்ற காங்கிரசுக்குமிடையே ஏற்பட்ட மனக்கசப்பே இந்த மனம் வேகும் காட்சிகளுக்குக் காரணமாம்.

வளர்ந்து வரும் உலகில் சாதியின் காரணமாகச் சண்டைகளா! அதனால் 30 பேர் சாவதா! தாலிகள் அறுவதா! — ஐய்கோ, என்னே கொடுமை, என்னே கொடுமை, செய்தியைப் படிக்கப் படிக்கக் கண்ணீர் வடிக்கிறோம். ஏ, சாதிச் சனியனே! உன்னால் பட்டபாடு போதாது என்று, இந்தப் பரிசையும் வழங்குகிறாய் என்று வேதனையோடு கேட்கிறோம்.

அறிவும் அன்பும் மோதிக் கொள்ள வேண்டிய காலம் இது. ஆனால், இராமநாதபுரம் மாவட்டத்தின் பல பகுதிகள் இன்னும் இந்த அறிவுரைகள் பரவாமல் உள்ளன —பல இடங்களைப்போல. அப்படிப்பட்ட மக்களிடையே சாதியைச் சொல்லி, சண்டைகளை எழுப்பி விடுகிறார்கள். யாரோ சமூகத் துரோகிகள் கிளப்பிய சதி, இவ்வளவு உயிர்களைப் பலி கொண்டுவிட்டது! அரசியல் வாழ்விலுள்ள ஒவ்வொருவரும் கண்ணீர் சிந்தியவண்ணம் வெட்கப்பட வேண்டிய விஷயமாகும் இது.

மறவர்கள் எனப்படுவோருக்கு அரசின் பேரில் அதிருப்தி இருக்கக் கூடும். அரசாளும் கட்சிக்கும் அவர்கள் பால் எரிச்சலிருக்கலாம். ஆனால் எரிச்சலையும் ஆத்திரத்தையும் அணை போட்டுத் தடுக்கக்கூடிய ஆற்றலுள்ள தலைவர்கள் இருசாரிலும் உள்ளனர். இருந்தும் இப்படியொரு நிலைமை வளர்ந்ததற்கு உள்ளபடியே மனம் வேகிறோம். தலைகுனிகிறோம்.

அநியாயமாக மாண்டுபோன முப்பது பேர்களையும் எண்ணிப் பார்த்தாவது ஆளும் காமராசரும், ஆற்றல் மிக்க பசும்பொன் முத்துராமலிங்கனாரும் இந்த அடாத போக்கு, இனியும் தலைகாட்டாத அளவுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆளும் கட்சியைவிட, பசும்பொன் தேவர் அவர்களுக்கு அங்கே செல்வாக்கு அதிகம். அவருடைய நற்பணி, சாதியின் அடிப்படையில் உலவும் வேற்றுமைகளை அகற்றிட பெரிதும் பயன்படும். எதிர்காலம் இந்த நன்னிலையை உண்டாக்குமா!—என்று மிகவும் பணிவன்போடு முதுகளத்தூர் வட்டாரத்துப் பெருமக்களை வேண்டுகிறோம். முப்பது உயிர்கள்! ஏ, அப்பா......இதயம் குமுறுகின்றது! எழுதவே கைநடுங்குகிறது! யாரை நோவது? யாரிடம் சொல்லி அழுவது?

2-ம் பக்கத் தொடர்ச்சி

இரு மருங்கிலும் பயங்கரமான சூழ்நிலை. திருடர்களுக்குக் கொண்டாட்டமான இடம். அதிலே, கார் பறந்தது இருளைக் கிழித்துக்கொண்டு. அடிக்கடி 'தண்ணீர்' குடித்தபடிதான்—நாலைந்து கடைகள், மினுக் மினுக்கென்று எரியும் விளக்குகள், இத்யாதியுடன் விளங்கிற்று நாகுடி. அங்கே போய்க் கேட்டால், "இந்தப் பெரிய கார் போகமுடியாது. 'ஜீப்' இருந்தால் சுலபமாகப் போகலாம். அதிலும், அது ஒற்றையடிப்பாதை. துணைக்கு ஒரு 10-பேர் இருந்தால்தான் ஜீப்பிலும் பயமில்லாமல் போகலாம்" என்றுர்கள். நல்ல இருட்டு! இரண்டு நாட்களுக்கு முன்புதான் மழை பெய்ததாம்! இந்நிலையில் எப்படி சுப்பிரமணியபுரம் போவது? பொன்னுவேல், அங்கேயிருந்த ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, ஒரு சைகிளும் வாடகைக்கு எடுத்துக்கொண்டு, தான், போய் ஊரில் சொல்லி ஏதாவது ஏற்பாடு செய்து வருவதாகப் போய்விட்டார். மணியோ 10. பகல் 12-மணிக்கு கடலூரில் ஏதோ சாப்பிட்டோம்--அவ்வளவுதான். இந்நிலையில், "சரி! இங்கேயே உட்கார்ந்தால் முடியாது. ஏதாவது விளக்குக் கிடைக்கிறதா என்று பார். நாமே, நடந்து போய்விடலாம்" என்கிறுர் அண்ணு. பகல் 2-மணியிலிருந்து மணி 10-ஆகிவிட்டதே! நாகுடியில் வேறு சொல்லிவிட்டார்கள் — பகல் 12-மணியிலிருந்து போன கூட்டம் அப்படியே சுப்பிரமணியபுரத்தில் காத்துக்கொண்டு இருப்பதாக!! எனவே, அவர் பறந்தார். இந்த நள்ளிருட்டில் — அவரை அழைத்துக்கொண்டு—செச்சே! கூடாது!! என்று முடிவு செய்துகொண்டேன்.

அவர், விடுவதாயில்லை. எங்களது நிராதரவான நிலைமையைக் கண்டு ஒரு உருவம் வந்தது—கந்தலாடை, கருத்த உரு, வயது 50-இருக்கும்—ஒரு விளக்கையும் இரண்டு மூன்று சிறுவர்களையும் இழுத்துக்கொண்டு வந்து, 'கிளம்புங்க' என்றது. அண்ணு கிளம்பிவிட்டார்! எனக்கு அச்சம்தான்!! கூடவந்த சிறு பையன் ஒருவன் பெரிய வீராதி வீரனைப்போல் கம்பு ஒன்று வைத்திருந்தான். கொஞ்சத் தூரம் போயிருப்போம்—ஒரு பாம்பு—எப்படி இருந்திருக்கும்? அதிலும் அண்ணுவுக்கு!! அந்தப் பையன் கம்பால் அடித்து எறிந்தான் பாம்பை. தவறி விழுந்தால் பள்ளம்-கொஞ்சம் வேகமாக அடியெடுத்து வைத்தால் முட்புதர்—பாதை முழுதுமோ சேறும் உளையும் — இவைகளைத் தாண்டி வயல் காடுகள்—தாண்ட வேண்டிய இடத்தில் தாண்டி—விழ நேர்ந்த இடங்களில் சமாளித்து—ஏதோ ஒரு தீவிலே செல்வது போல, ஒருவாருகச் சென்றடைந்தோம்.

மணி-11. நேராகப் பொதுக் கூட்டத்துக்குத்தானே போக வேண்டும்? என்று அண்ணுவைக் கண்டதும் ஆவலோடு ஓடிவந்தவர்களைக் கேட்டேன்! "பொதுக்கூட்டம், பிறகு. முதலில் பள்ளிக்கூடத் திறப்பு விழா" என்றுர்கள். இரவு 11-மணிக்குத் திறப்பு விழா! இத்துணைக்கும் அந்தப் பள்ளிக்கூடம் கழகத்தவர்கள் கட்டியதல்ல — ஊரார் அனைவரும் சேர்ந்து கட்டியது. "கோபித்துக் கொள்ளுகிறுர்களோ! இந்நேரமாயிற்று என்று; யுார் யார் என்ன சொல்லுகிறுர்களோ!" எனும் எண்ணத்துடனேயே, பள்ளிக்கூடத்தை நோக்கிச் சென்ருேம். நெருங்க நெருங்க என் ஆச்சரியம் அதிகமாயிற்று. பல்லாயிரக் கணக்கான மக்கள்! பகல் 12-மணிக்கே வந்தவர்களாம்! அந்தச் சிற்றூரில் 200-வீடுகள் இருக்கக்கூடும்—500 ஓட்டர்கள்தான் உண்டாம். சிற்றுணவு விடுதியோ, தேனீர்க் கடைகளோகூடக் கிடையாது. எனினும், பசியையும் பொருட்படுத்தாது உட்கார்ந்து கிடந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டபோது, உள்ளபடியே மனம் புல்லரித்தது! காரின்மீது கடுங்கோபம் வந்தது!!

திறப்பு விழாக்கள், வரவேற்புகள் யாவும் முடிந்து பொதுக்கூட்டம் துவங்கி முடியும்போது மணி 12½ ஆயிற்று. அலுப்புச் சலிப்போ ஆத்திரமோ முணுமுணுப்போ இல்லாமல் அவ்வளவு பேரும் இருந்தார்கள். நாகரீக வாடை வீசும் நகரத்தவர்களல்ல அவர்கள்! உழைத்து வாழும் விவசாயப் பெருங்குடி மக்கள். ஆண்கள் மட்டுமல்ல, ஏராளமான தாய்மார்களும் வந்திருந்தார்கள். ஒரு இருபது முப்பது கிராமத்திலிருந்து வந்திருந்தால்தான் அவ்வளவு கூட்டம் சேர்ந்திருக்க முடியும். அவ்வளவு கூட்டம்! அந்த இருட்டில் 'சிறு தீவை'ப் போல விளங்கும் அந்தச் சுப்பிரமணியபுரத்தை விட்டு அத்தனை பேரும் போயாக வேண்டும்!! எத்தனை எத்தனையோ திட்டங்களைச் சொல்லுகிறுர்கள் அரசினர் — ஆனுல், அந்த ஊருக்கு, ஒரு பாதை கிடையாது. மழை அதிகம் பெய்தால், வெளியுலகத்துச் சேதிகள் நுழையக் குறைந்தது இரண்டு நாளாகும்!!

நாள் முழுதும் நாங்கள் பட்டுச் சென்ற பாடெல்லாம், தோழர்களையும், கூடியிருந்த மக்கள் வெள்ளத்தையும் கண்டபோது போன இடம் தெரியவில்லை. கூட்டம் முடிந்ததும், கழகத் தோழர் ஒருவர் இல்லத்துக்கு வந்தோம்! அப்போதுதான் தெரிந்தது, அந்த ஊரே அன்றைய தினம் விழாக்கோலம் கொண்டிருந்தது, எனகிற செய்தி. எங்கு பார்த்தாலும் தோரணங்கள்! வாழை மரங்கள் வரிசை நெடுகிலும்! இருவண்ணக் கொடிகளை பந்தலிடுவதுபோல, குறுக்கும் நெடுக்கும் போட்டிருந்தனர்! இந்த அலங்காரம் மட்டும் கடந்த 15 நாட்களாகச் செய்தார்களாம், தோழர்கள். அதுமட்டுமின்றி, அன்றைய

## திருமணம்

சின்னக்காஞ்சிபுரம் வரகுவாசல் தெரு, திரு: சி. ஜி. இரகுபதி அவர்களின் புதல்வர்களான சி. ஆர். ராமச்சந்திரனுக்கும் - பனிபாய்க்கும், சி. ஆர். இலட்சுமணன் - இலட்சுமிக்கும் கடந்த 16—9—57 காலை காஞ்சி நகராட்சி மன்றத் துணைத் தலைவர் அ. க. தங்கவேலர் தலைமையில் திருந்திய திருமணம், மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி, தமிழ்ப் பேராசிரியர் ந. சஞ்சீவி, மா. கி. தசரதன், பூஞ்சோலை, ஈழத்து அடிகள், அரங்கண்ணல் ஆகியோர் பேசினர். அண்ணுதுரை அனைவருக்கும் நன்றி கூறினுர். பல அலுவலர்களும், நண்பர்களும் வந்திருந்து திருமணத்தைச் சிறப்பித்து வைத்தனர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துக்களும் வழங்கப்பட்டன.

தினம், ஒவ்வொரு வீட்டிலும் கோலமிட்டு, ஊர்வலம் செல்லுவதற்காக அலங்காரம் செய்திருந்தார்கள். "இவைகளையெல்லாம் நீங்கள் பகலில் பார்த்திருக்க வேண்டும்", என்றார் ஒரு தோழர். நாங்கள் வந்து நாகுடியில் தங்கியிருக்கிற செய்தி அறிந்து தஞ்சை மாவட்ட செயலாளர் N. S. **இளங்கோ, பேராவூரணி அடைக்கலம்** முதலியவர்கள் ஒருமுறை நாகுடிக்குப் போய் திரும்பி வந்து கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அந்தச் சிற்றூரில் நான் கண்ட இன்னொரு வியப்புக்குரிய நிகழ்ச்சி—அறந்தாங்கி வட்டாரத்திலேயே திராவிட கழகத்துக்கு முக்கியமானவராக விளங்கிய **துரைஅரசன்** என்பவரே, கூட்டத்துக்குத் தலைமைதாங்கி யாவும் செய்தார் என்பதுதான்! தி. மு. க. வில் சேர்ந்துவிட்டார் என்று தோழர்கள் தெரிவித்தார்கள்!!

இரவு உணவு முடிந்து 1 மணிக்கு மேல், ஒரு வண்டி கட்டிக்கொண்டு கிளம்பினோம். தோழர்கள் 20 பேர், வண்டியைக் 'காப்பாற்றி' வந்தார்கள். எங்களை இருட்டில் அழைத்துச் சென்றாரே **கருப்பையாக்கோனார்**—அவர் பெயர் அதுதான்!—அவரே வண்டியையும் ஓட்டிக்கொண்டு வந்து சேர்த்தார். 2 மணிக்கு நாகுடி சேர்ந்தோம்! உடனே புறப்பட்டு காஞ்சிக்கு வந்துசேரவேண்டும். அதற்காக, காரை எடுக்கச் சொன்னோம். கிளம்பவில்லை, கார்! பெரும் ஓய்வு விரும்பிவிட்டது!! பகலெல்லாம் தண்ணீருக்கு அலைந்த கார் இயந்திரம், இரவில் குளிர்ச்சியடைந்து போனதால், கிளம்பவில்லை. தள்ளினோம் — தள்ளினோம் — 3 மணி வரை தள்ளிப்பார்த்தோம். அப்படியும் கிளம்பாமற் போகவே, சோர்ந்துபோய், மரத்தடியிலும் டீக்கடையிலும் சாய்ந்தோம். இப்படி நாங்கள் திண்டாடிய செய்தி கேள்விப்பட்டு அறந்தாங்கியிலிருந்து துரையரசன் ஒரு கார் கொண்டுவந்து எங்களை அறந்தாங்கியிலுள்ள அவரில்லத்துக்கு இட்டுச் சென்றார். நினைப்பு முழுவதும் காஞ்சியிலிருந்தது! எங்கள் கார், 'ரிப்பேராகி' வந்துசேர நண்பகல் மணி 2 ஆயிற்று!! தோழர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, கிளம்பினோம்—கொஞ்சத் தூரம் போனதும், கார் ரயிலாயிற்று—'குப்' 'குப்' என்று புகைவிடலாயிற்று. மறுநாள் காலையில் காஞ்சியில் ஒரு திருமணம்! அவசியம் இருக்கவேண்டிய திருமணம்! ஆகவே, அடிக்கடி தண்ணீர் ஊற்றிக்கொண்டு, பகல் 2 மணிக்கு அறந்தாங்கியை விட்டுப் புறப்பட்ட நாங்கள் மன்னார்குடி—குடந்தை—அணைக்கரை—சேத்தியார் தோப்பு—விருத்தாசலம்—உளுந்தூர்ப்பேட்டை—விழுப்புரம் -வழியாகத் திண்டிவனம் தாண்டி விடியற்காலை மணி 2க்கு மதுராந்தகம் நோக்கி வந்துகொண்டிருக்கிறோம். திடீரென 'வீல்' என்று ஒரு ஒலி! எங்களையெல்லாம் தூக்கிவாரிப் போட்டது!! என்ன? என்று காரை நிறுத்திவிட்டு இறங்கிப்பார்த்தால், காரின் முன்னே உள்ள Spring plate என்பது ஒடிந்து சக்கரத்தைப்போய் உராசிக்கொண்டு இருந்தது. காரைக் கிளப்பினாலோ, கிளம்பி நின்றுவிடுகிறது. இடமோ இரு பக்கமும் காடு! பொழுது விடிவதற்குள் காஞ்சி சென்றாக வேண்டும்? வண்டியோ, கிளம்பாது!! என்ன செய்வது? திகைத்துக்கொண்டிருந்த சமயத்தில் விருத்தாசலத்திலிருந்து சென்றுகொண்டிருந்த ஒரு லாரிக்காரர் நிறுத்தினார். 'யார்' என்று தெரிந்துகொண்டதும், தன்னாலான முயற்சிகளையெல்லாம் செய்து உடைந்த 'பிளேட்'டை சரி செய்தார். "அப்பாடா!", என்று வண்டியைக் கிளப்பினால், இப்போது, 'இஞ்சினே' படபட்வென்று ஆட ஆரம்பித்தது! பயந்துபோன நாங்கள், டிரைவரையும் வண்டியையும் ஒரு ஓரமாக விட்டுவிட்டு, லாரியிலேயே செங்கற்பட்டு வரை பயணம் செய்தோம். மணி 3! ஏதாவது ஒரு வாடகைக் கார் பேசிக்கொண்டு வரலாமென்றாலும் கிடைக்கவில்லை—இந்த அகால நேரத்தில் எங்குதான் போய்ப் படுக்கவோ, உட்காரவோ முடியும்? கழகத் தோழர் பலராமன் வீட்டுக்குப் போய் வா, என்றார் அண்ணா! அவர், அன்றைக்குத்தான் சென்னை சென்றுவிட்டாராம்!! சரி', என்று காலை 5 மணி வரை, யில், விழித்திருந்து, பஸ் ஏறி ஊர் வந்து சேர்ந்தோம்.

உண்மையில், இந்த 'ஒருநாள்' கூட்டத்துக்காகப் பட்டபாடும், பெற்ற அலைச்சல்களும் அதிகம் என்றாலும் உள்ளத்தில் ஒரு குதூகலம் இருக்கவே செய்தது. கழகமே அறியாத கருப்பையாக்கோனாரும், கழகத்தைச் சாராத விருத்தாசலம் லாரி உரிமையாளரான முஸ்லீம் பெரியவரும் காட்டிய அன்பை எப்படி மறக்க இயலும்? அவர்கள் எல்லாம் காட்டுகிற இந்த அன்பும் நல்லெண்ணமும் தி. மு. க. - வால் ஏற்படுவது தவிர வேறென்ன! 'தி. மு. க.', என்றதும் எவ்வளவு நம்பிக்கையேற்பட்டிருக்கிறது, மக்களுக்கு!!

இந்த நம்பிக்கை பூக்க, நாள் தோறும், நாடெங்கும் பாடுபடும் இலட்சக்கணக்கான வாலிபர்கள் எத்துணை எத்துணை! சின்னஞ்சிறு ஊர்—செல்ல முடியாத ஊர்—சுப்பிரமணியபுரமே, நம் ஊராகிவிட்டது. பெரியவர்களும், கிராம மக்களும் கழகத்தின்பாலும் தொண்டாற்றும் நம்பாலும் காட்டும் அன்புக்கு என்ன பதில் தர முடியும்? இருளில் வழிகாட்ட வந்த கருப்பையா, வழியில் தவித்த எங்களுக்கு வாஞ்சையோடு உதவி புரிந்த முஸ்லிம் பெரியவர் இவர்களையெல்லாம் மறக்கவா இயலும்!! ஒருபோதும், இயலாது.

கழகம், புதுக்கட்டம் புகுந்துவிட்டது. கழகத்தை, தமது காவலன்போல கருத ஆரம்பித்துவிட்டார்கள், மக்கள். அவர்தம் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடப்பது தவிர நம்மால் என்ன செய்ய முடியும்!!

வரும் **ஒன்பதாம்** ஆண்டில் இதையே, நாம் ஒவ்வொருவரும் நெஞ்சிலிருத்திக் கொள்வோம்.

★